போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4042

# திராவிடநாடு

மலர் 13 | 1—5—55 | இதழ்: 43



★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஒரே மனதாக என்னைப் பொதுச்செயலாளராகத் தேர்தெடுத்தது குறித்து நான் பெருமிதமும், பெருமகிழ்ச்சியும் கொள்ளுகிறேன்; மிகப் பொறுப்பு வாய்ந்த பதவியை என் மீது கொண்டிருக்கும் அன்பின் காரணமாகப் பொதுக்குழு உறுப்பினர்கள் சுமத்தியுள்ளார்கள். அவர்கள் நல்லன்பும், ஆதரவும், என் தொண்டுக்கு ஆக்கம் தரும் என்று நம்பி, இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளேன். அனைவருக்கும், என் நன்றி.

**இரா. நெடுஞ்செழியன்.**

★

## மே தினம்

உலகத் திருநாள்!
பாட்டாளிகள் தினம்!!
பாகுபாடு இல்லாமல், மண்ணின் மடியில் கிடக்கும் அத்தனை, உழைப்பாளர்களும் கொண்டாடும், தினம்.

✱

குபேரபுரியெனச் சொல்லப்படும் அமெரிக்கா முதல், விடுதலை பெற்ற நாடான ரஷ்யா வரை—எங்கும், இத்தினம் கொண்டாடப் படுகிறது. ரஷ்யத் தொழிலாளர்கள், அரசாங்க ஒத்துழைப்போடு, விழா நடத்துகிறார்கள்! அமெரிக்கா போன்ற ஏனைய நாடுகளில் பாட்டாளிகள் மிரண்ட கண்களோடு, பவனிவருகிறார்கள்.

✱

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு தேசியத் திருநாள் — உண்டு. அவை, ஒவ்வொரு சமயம் வந்து போவதும் உண்டு.
ஆனால்,
உலக முழுமையும், ஒரேவிதமாக, நடைபெறும் தினம்—மே தினம்தான்.

✱

1886—1955
அறுபத்து ஒன்பது ஆண்டுகள், உலகம் மே தினம் கொண்டாடிவிட்டது! அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரிலே, 8 மணி நேர வேலை!—என்று முதல் முழக்கம் கிளம்பிற்று.
முதல் உரிமைக் குரல்!
69-ஆண்டுகள், ஓடிவிட்டன.
இடையில்; இரண்டே நாடுகள்தான், பாட்டாளிகளின் கூடாரங்களாகியுள்ளன-ஒன்று ரஷ்யா! இன்னொன்று சீனா!! அந்தப் பாதைக்கு சென்றுகொண்டிருக்கும், நாடுகளும், சிலதான்.

✱

திராவிடம்-பொன்விளையும் பூமி!
ஆயினும், புசிக்க வழியற்ற ஏழைகளின் காடாக இருக்கிறது.
அது இன்னும் அரசியல் விலங்கை அகற்றிக்கொள்ள வில்லை..
அதனை ஒடித்தெறிய, செந்நீர் சிந்திடும்தியாகிகள்லட்சியம் ஈடேற, மேதினத்தன்று, எல்லோரும் உறுதிகொள்வோம்.
பெறுவோம், திராவிட நாடு!
அமைப்போம், பாட்டாளிகள் அரசு!

# ஐந்து பத்தாயிற்று

[ அண்ணாதுரை ]

★

"மகனே! மோகினியிடம் மையல், கொள்ளாதே—அவள் உன் இதய வீணையை மீட்டிவிட்டு, இன்ப புரிக்கு அழைத்துப் போவதாகப் பாசாங்கு செய்துவிட்டு, நீ அவளிடம் சொக்கிப் போன பிறகு, விண்ணுலகு சென்று, "வீணன்! என் முல்லைச் சிரிப்புக் கண்டு மனதைப் பறிகொடுத்துவிட்டான். ஏங்கித் தவிக்கிறான், பூலோகத்தில். நான் வானுலக மங்கை, அவனுக்கு விருந்தளிக்கும் மண்ணுலக மங்கை அல்ல என்ற உண்மையை உணர முடியாமல், பாழாகிப் போகிறான்" என்று பேசிக் கேலி செய்துவிட்டு, விண்மீன்களுடன் விளையாடிக் கொண்டிருப்பாள். மகனே! மோகினியிடம மையல் கொள்ளாதே!" என்று தாய், தன் மகனுக்கு அறிவுரை கூறினாள். அவனோ, எழில் மங்கையைக் கண்டு அவளுக்குத் தன் இதயத்தைக் காணிக்கையாக்கிவிட்டான். என் மனதுக்கு உகந்தவள், விண்ணுலகில் இருப்பின் என்ன, பாதாளத்தில் இருந்தால் என்ன, அவளை அடைந்தே திருவேன் என்று பிடிவாதம் பேசினான். அவனா பேசினான், பாபம்! காதல் பேசிற்று!! படகொன்றில் பயணமானான், பாகு கனிமொழிப் பாவையைப் பெற்றே திரும்புவது என்று. பயனற்ற பயணம்! சித்தக் குழப்பத்தின் விளைவு! பெற்ற மனம் பதைத்தது. படகில் ஏறிச் செல்லக் கிளம்புகிறான், மனதைப் பறிகொடுத்த மகன். பயணத்தைத் தடுத்திட வேண்டும். எனவே, தாய், அந்தப் படகைக் கவிழ்த்து விட்டார்களாம்! பயணம் என்ன ஆயிற்று? காதலனின் கதி என்ன ஆயிற்று? அவனிடம் கண்ணால் பேசிக் கருத்தைக் குழப்பிவிட்டு ககன மார்க்கம் சென்ற கட்டழகி என்ன செய்தாள்?—என்ற விவரம் முக்கியமல்ல! படகு கவிழ்ந்தது! அந்த இடம்தான் பாண்டுங். ஆமாம், இருபத்து ஒன்பது நாடுகள் கூடி, ஆசிய—ஆபிரிக்க மாநாடு நடத்தினரே, அதே பாண்டுங்தான்! கவிழ்ந்த படகு என்பதுதான் பாண்டுங் என்பதற்கு உள்ள பொருள்—இப் பொருள் ஏற்பட்டதற்கான பழைய கதைதான் மேலே குறிக்கப்பட்டிருப்பது.

கவிழ்ந்த படகு! இந்தோனேஷியாவில் உள்ள பாண்டுங்பற்றி இப்படி ஒரு கதை உண்டு என்று அறிந்து கூடினரோ, அறியாமலேயே அங்கு மாநாடு அமைத்தனரோ, தெரியவில்லை. பெயரின் பொருளைக் கவனிக்கும்போது, அவ்வளவு உற்சாக மூட்டுவதாகக் காணோம்; மாநாட்டின் முடிவைப் பார்க்கும்போது, கவிழ்ந்த படகு, நிமிர்த்தப்பட்டதாகவும் தெரியவில்லை.

✱

பாண்டுங், எரிமலைப் பிரதேசத்திலே உள்ள ஓர் பழைய நகரம்; இன்று உலகெங்கும் அதன் பெயர் தெரிந்துவிட்டது; அவ்வளவு முக்யத்துவம் பொருந்திய ஓர் மாநாடு, அங்கு நடைபெற்றிருக்கிறது. பாண்டுங்—கவிழ்ந்த படகு—எரிமலையின் அடிவாரத்தில் இருப்பதுடன், இன்று இந்தோனேஷிய அரசியலில் எரிமலை என்று கருதப்படும், தாருல் இஸ்லாம் எனும் புரட்சி இயக்கத்தவரின் நடமாட்டத்தைக் காணும் பகுதியிலும் இருக்கிறது. மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே, பாண்டுங்குக்கு முப்பது கல் தொலைவில், ஓர் சிற்றூரில், தாருல் இஸ்லாம் படையினர் தாக்குதல் நடத்தினர்.

இந்தோனேஷியாவில் இன்று அதிகாரத்தில் இருக்கும் டாக்டர் சுகர்ணோ, செல்வாக்கு மிக்கவர்—தியாகத் தழும்பு ஏற்பெற்றவர்—முதலமைச்சரோ, ஜோஜோ என்று செல்லப் பெயர் பெற்று இந்தோனேஷியாவில் செல்வாக்கு பெற்றிருக்கிறார்—எனினும், இன்று ஆட்சியில் உள்ளவர்களை அகற்றிவிட்டு, உண்மையான மக்களாட்சி அமைத்தாக வேண்டும் என்று சூளுரைத்துப் பணியாற்றி வரும் இயக்கங்கள் உள்ளன. தாருஸ் இஸ்லாம்—வெறியரின் பலாத்கார இயக்கம், கொள்ளைக் கூட்டம், மத வெறி பிடித்தலையும் கும்பல், என்றெல்லாம், சுகர்ணோ கட்சியினரால் கண்டிக்கப்படுகிறது—எனினும், வளர்ந்து வருகிறது. முன்னாள் முதலமைச்சர் ஷாரீர் போன்றார், சமதர்மம் மலரப் பாடுபடுகிறார்கள் என்று கூறப்படுகிறது. கட்சிகளுக்கிடையே உள்ள பூசலின் விளைவாக வீசிக்கொள்ளப்படும் ஏசலை ஒதுக்கி வைத்துவிட்டுப் பார்க்கும் போது, சுகர்ணோவின் ஆட்சிக்கு எதிர்ப்பு, விளக்கமாகும் அளவில் உருவெடுத்திருக்கிறது, என்ற உண்மை தெரிகிறது. இந்த 'எதிர்ப்பை'ச் சமாளிக்க, ஒரு பெரிய விளம்பரம் தேடிக் கொள்ளவே, ஆசியா—ஆப்பிரிக்கா மாநாட்டை, பாண்டுங்கில் கூடும்படி, சுகர்ணோ செய்திருக்கிறார், என்று இந்தோனேஷிய அரசியலில் உள்ள எதிர்க்கட்சியினர் வெளிப்படையாகவே குற்றம் சாட்டியுள்ளனர். எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் வகையான 'விளம்பரம்' தேடிக் கொள்ளும் நோக்கத்துடனேதான் மாநாடு கூட்டப்பட்டது என்று கூறுவதைவிட, மாநாடு கூட்டிய தன் 'விளைவு,' அது என்று கூறுவதை யாரும் எளிதில் மறுக்க முடியாது, சிகப்புச் சீனா, பழுப்பு நிற இந்தியா, பச்சைநிற பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், இலங்கை, பிலிப்பைன், இப்படி 29 நாடுகள்! அத்தகைய மாநாட்டை, டாக்டர் சுகர்ணோ துவக்கிவைக்கிறார் ஜோஜோ தலைமை தாங்குகிறார், என்றால், நிச்சயமாக, இத்தகைய மகத்தான, உலகம் கூர்ந்து கவனிக்கும் ஓர் மாநாட்டில் நடுநாயகமாக இருந்த சுகர்ணோவின் செல்வாக்கு உயருவதும் அவருடைய கட்சியின் செல்வாக்கு வளருவதும், நிச்சயம் தானே! இதை எண்ணித்தான் 'எதிர்க்கட்சிகள்' பாண்டுங் மாநாட்டை, 'விளம்பரம்' தேடும் தந்திரம் என்று கூறின. இதே முறையில் வேறு பல நாட்டுத் தலைவர்கள்மீதும் குற்றச்சாட்டுகள் விழக்கூடும்! ஆனால் உண்மையில் பாண்டுங் மாநாடு, சுகர்ணோ, ஜோஜோ, கொத்தலாவலை, ரோமுலு, ஜமாலி, என்றுள்ள எவருக்கும் ஒளி அளிக்கவில்லை, வழக்கமாக இத்தகைய மாநாடுகளில் 'உற்சவர்' ஆகும் நேரு பண்டிதருக்குக்கூட ஒளி அதிகம் கிடைக்கவில்லை, எல்லாவற்றையும், சீனத்தலைவர் சோ-இன்-லாய் தன் பக்கம் திருப்பிக் கொண்டுவிட்டார்!! பாண்டுங் மாநாடு, சோ—இன்—லாயின் மகத்தான வெற்றியாகிவிட்டது. இப்படிப்பட்டவரா, சோன்—லாய்? சம்மட்டி அடி அடிப்பார்! அறிவாள்கொண்டு வெட்டுவார்!! என்றெல்லாம் எண்ணிக்கொண்டோம், 'சீனவெடி'கூடப் போடக் காணோம், சிரித்த முகம், உபசார மொழி, நேசப்பார்வை, இப்படியல்லவா இருக்கிறார், சோ—இன்—லாய்—என்று பலரும் வியந்து பாராட்டத்தக்க முறையில், சோ நடந்துகொண்டிருக்கிறார்.

பாண்டுங்கில் கூடிய நாடுகளிலேயே, மிகமிகப் பலம் வாய்ந்தது, சீனா, என்பதை மறைத்துப் பயனில்லை.

உலகம் கண்டு வியக்கத்தக்க முறையிலும், ஏகாதிபத்யங்கள் கண்டு கிலிகொள்ளத்தக்க வகையிலும், மிகப் பெரிய புரட்சியை வெற்றிகரமாக நடத்தி, புதியதோர் பொலிவுடன் மக்களாட்சி அமைத்து உலக மக்கட் தொகையில் நாலிலோர் பகுதியினரை, நடத்திச்செல்லும் பெரும் பொறுப்பை, உறுதியுடன் ஏற்றுக் கொண்டுள்ளார் புதிய சீனத்துத் தலைவர், சோ.இன்-லாய். படைபலம் சாமான்யமானதல்ல!! வேடிக்கைக்குச் சொல்லுவதானால், பாண்டுங் மாநாட்டில் கலந்துகொண்ட எந்த நாட்டுத் தலைவரை வேண்டுமானாலும், நேரு பண்டிதர் உட்பட, சுகர்ணோ 'கைது' செய்து விட்டிருக்கமுடியும்—பிறகு 'கைது' செய்யப்பட்ட தலைவருடைய நாட்டுப் படை, இந்தோனேஷியா மீது படை எடுத்துச் சென்றுதான் 'சிறை'யை மீட்கவேண்டி வரும் — ஆனால், சோ-இன்-லாயைக் கைது

## —உலகப்பா! உன்னை நினை—

நெற்றியில் வியர்வை; நெஞ்செலும்புகள் தெரிகின்றன.

உழைக்கிறான், உடல் மெலிய. எனினும் கிடைக்கிறது முதுகில்—சாட்டையடி. அந்த அடிகளைத் தாங்கிக்கொண்டே வேலை செய்துகொண்டிருக்கிறான், அந்த ஏழை.

அவன் யார்? பாட்டாளி என்போம், நாம்.

ஆனால், அவனைப் பார்த்து, "உலகப்பா" என்று அழைத்தார், கவிஞர். உலகப்பனும், அவன்! பொருள் பொதிந்த சொல்!

உலகம், அவன் உழைப்பால் வாழ்கிறது — எனவே, அவன்தான் உலகப்பன். ஆனால் உலகப்பன் சுகமாக வாழ்கிறானா?

உலகைக் காப்பாற்ற, உத்தம சேவையில் ஈடுபடுவதாகச் சொல்லும் ராஜதந்திரிகள், அரசியல் அறிஞர்கள் — அநேகம். ஆசியாவுக்கே ஜோதி என்று போற்றப்படுவோரும் உண்டு.

ஆனால், உலகப்பன் கதி என்ன? தேள் கொட்டுகிறது, கழனியில். ஆலை கசக்கிப்பிழிகிறது, அவனை. அப்படிப் பாடுபட்டாலும், வீட்டில் இன்பம் உண்டா? 'எங்கெங்கு காணினும் துன்பமடா! ஏழேழு நரக வேதனை எம் வாழ்க்கையடா" என்று — கீதமல்ல — ஒப்பாரி வைக்கிறான்.

பொழுது விடிகிறது! பிறகு இருள்கிறது!! அவன் வாழ்விலோ, இருள்தான் எப்போதும்; ஒளியே, ஏற்படுவதில்லை.

அவன் வாழும் உலகில், மாடகூடங்களும் மலர்புரியும், மந்த, காச முகங்களும் உண்டு; ஆனால்; அவனோ—என்றும் ஏழை.

இந்த நிலை என்று மாறும்? உலகப்பனும் உல்லாசியாக எப்போது வாழ்வான்?

இந்தக் கேள்வியைக் கிளப்பும் தினமே

**மே தினம்!**
**உலகப்பன் தினம்!!**
**உலக முழுவதும் நடைபெறும் தினம்!**

செய்திருக்கமுடியாது — செய்திருந்தால், சிறையைத் தூளாக்கி அவரை விடுவிக்க, இந்தோனேஷியாவிலேயே 80 இலட்சம் சீனர்கள் உள்ளனர்!

சீனர்கள் இன்று, இந்தோனேஷியா, இந்தோ-சைனு, மலாய், தாய்லாந்து, பர்மா—போன்ற தென்கிழக்குஆசிய நாடுகள் பலவற்றிலே இலட்சக்கணக்கில் உள்ளனர். அவர்களெல்லாம் கம்யூனிஸ்டுகள் என்பதல்ல—அவர்கள் யாவரும் சீனர்கள் என்ற இனப்பற்று மிகுதியும் கொண்டவர்கள்!

பல்வேறு நாடுகளிலே அரசியல் கொந்தளிப்பு ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு, 'சீனர்கள்' உள்ளனர்!

சீனுவோ, புதிய ஆட்சியினுல் புதிய பலம் பெற்றுத் திகழ்கிறது.

சீனர்களோ, சீனுவில் மட்டுமின்றி தென்கிழக்கு ஆசியப் பகுதியிலே, பரவி இருக்கின்றனர்!

இந்தப் பேருண்மையை அறிந்த அச்சத்தினுலேயே அமெரிக்கா, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒப்பந்தம் எனப்படும் சியாடோ என்ற அமைப்பை ஏற்படுத்திற்று —இந்த சியாடோ, வெறும் கேலிக்கூத்து, என்பதை பாண்டுங் காட்டிவிட்டது—இங்குதான் தென்கிழக்கு ஆசிய நாடுகள்கூடின, சியாடோவில் அல்ல!

ராஜதந்திரத் துறையில் பிரிட்டன், அமெரிக்காபோன்ற நாடுகளே திறம்படைத்தன — என்ற போலித்த்துவத்தைப் பொடிப் பொடியாக்கிவிட்டார் சோ-இன்-லாய்!

சியாடோ, நேடோ, மேடோ, தென்கிழக்கு ஆசிய ஒப்பந்தம், வட அட்லாண்டிக் நாடுகளின் ஒப்பந்தம், மத்திய கிழக்கு பாதுகாப்பு ஒப்பந்தம், என்ற பல அமைப்புகளை, டாலர் ஆசை காட்டியும், அணுகுண்டு அச்சத்தை மூட்டியும் அமெரிக்கா ஏற்பாடு செய்தது— சோ-இன்-லாய் பாண்டுங்கில், பெற்றவெற்றி, அமெரிக்க ராஜதந்திரத்தையே கதி கலங்கச் செய்திருக்கிறது.

பாண்டுங் மாநாட்டில், அமெரிக்காவின் 'வக்கில்கள்' 'ஆஜர்' ஆகாமலில்லை!

பாகிஸ்தானும் பிலிப்பைன் நாடும், சியாடாவிலேயே சேர்ந்துள்ளன. ஈரான் நாட்டு உறுப்பினர், டல்லஸ் போலவே பேசினுர். கொத்தலாவலைக்கு வாஷிங்டனில் அமோக வரவேற்பே நடத்துவர், அவ்வளவு வன்மையாகக் 'கம்யூனிஸ்டுப் போக்கைக் கண்டித்திருக்கிருர்! இவ்வளவு வக்கில்கள் கிளம்பி, வம்புக்கு இழுத்தும், வலிய வலியச் சண்டைக்குக் கிளம்பியும், சோ-இன்-லாய், அமைதியாகவே இருந்திருக்கிருர், சமாதானத்தையே வலியுறுத்தியிருக்கிருர், சச்சரவுகள் எழும்போதெல்லாம் சமரச கீதம் பாடி இருக்கிருர். பாண்டுங் மாநாடு குழப்பத்தில் முடிந்தது—பாண்டுங் மாநாடு கம்யூனிஸ்டு கைப்பாவையாகிவிட்டது — இலங்கை வெளி ஏறிவிட்டது—பாகிஸ்தான் கண்டிக்கிறது—என்று இப்படி எல்லாம் தலைப்புகள் கொடுத்து மகிழலாம், என்று எண்ணிய அமெரிக்காவின் ஆசையில், மண் அள்ளிப் போட்டுவிட்டார் சோ!

இந்த ஒருவகையில் பாண்டுங் பெரியதோர் வெற்றி என்பதில் ஐயமில்லை.

சோ-இன்-லாய்க்கு மகத்தான வெற்றி.

இந்த வெற்றியைப் பெறுவதற்காகத் தரப்பட்டுள்ள விலை சாமான்யமானதல்ல.

மாநாட்டில், பொதுப்படையான தீர்மானங்களைத்தான் நிறைவேற்ற முடிந்தது—திட்டவட்டமான வேலை முறை வகுக்கப்படவில்லை—முடியவில்லை.

இருபொருள் தரும் வாக்கியங்கள் —தீர்மானங்களாயின!

நல்லெண்ணத் தூதுக்குழு போல, பாண்டுங் உருவெடுத்தது —பல நாடுகளின் கூட்டு முயற்சிக்கான முகாம் அமைக்கப்படவில்லை.

ஏகாதிபத்யம் கண்டிக்கப்பட்டது —சோவியத் ரஷியாவும் ஏகாதிபத்யத்தில் ஒன்றுதான், புதுவகையானது, என்ற பொருள் தொக்கி நிற்கும் முறையிலே 'வாசகம்' இருக்கிறது!

பல்வேறு நாடுகளிலே உள்ள விடுதலை இயக்கங்களுக்கு நல்லாசி கூறப்பட்டன, விடுதலையைப் பெற வழிவகை கூறப்படவில்லை.

அணு ஆபத்துப் பற்றிக் குறிப்பிடப்பட்டது — அதைத் தவிர்த்திடும் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

அரசியல் முறையில் மாறுபாடுகள் இருப்பினும், 'கூடி வாழலாம்' என்ற 'சுவிசேஷம்' பேசப்பட்டது, தகராறுகள் கிளம்பினுல், எப்படிக் களைவது என்று, திட்டம் இல்லை— தெளிவுகூடக் காணேம்.

(14-ம் பக்கம் பார்க்க)

## மே தின சரிதம்

15 மணி நேர வேலை; 13 மணி நேரம் இயந்திரத்துக்கடியிலே; முடியாது, நாங்களும் மனிதர்கள் தான்—இந்த மூல முழக்கம் அமெரிக்காவில் கிளம்பியது 1878ல்.

*

மூல முழக்கம் வலுத்து, பாட்டாளிகள் தமது உரிமையைக் கோரி, வேலை நிறுத்தம் செய்தனர், அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரத் தொழிலாளர்கள். 'எட்டு மணி நேரமே வேலை செய்வோம்' என்று கிளம்பிய எதிரொலியைக் கண்ட, ஆதிக்கபுரி, தொழிலாளர்களை அடக்குமுறைக்கு ஆளாக்கிற்று. தொழிலாளர் குருதி கொட்டிய அத்தினமே, மே முதல் தினம்—இது, 1886.

*

சர்க்காரின் அடக்குமுறை கண்டு கொதித்தெழுந்த தொழிலாளர்கள், மாபெரும் கண்டனம் காட்டினர். அதைக் கலைக்க, அமெரிக்க அரசு, போலீஸ் படைகளை அணிவகுத்து அனுப்பியது இதுவும் சிகாகோவில்தான்—மே, நாலாம் தேதி நடந்தது, இந் நிகழ்ச்சி. யாரோ, சிலர், போலீஸ் படைகளின்மீது வெடிகுண்டு வீசினர், 1886ல் தான்.

*

நாடெங்கும் கைது! நாலுபேர், நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டு, ஓராண்டு வழக்கு நடைபெற்றது. கடைசியில் அந்த நான்கு தொழிலாளருக்கும், தூக்குத்தண்டனை அளிக்கப்பட்டு, பட்டப்பகலில் நிறைவேற்றப்பட்டது. நால்வர் பிணமாயினர், நவம்பர் 11ந் தேதி 1887ல்.

*

உலகமே கலங்கியது. உலகத் தொழிலாளர், அதிர்ச்சியடைந்தனர். அதனுல், பாரிசில் கூடிய அகில உலகத் தொழிலாளர்கள் அந்நாளை உலகப் பாட்டாளி மக்களின் எழுச்சிதினமாகக் கொண்டாடுவதென முடிவு செய்தனர். மேதினம், உண்டாயிற்று— தீர்மான மூலம்—1889ல்.

# அரசியற் கருத்துக்கள்

[ அன்று முதல் இன்று வரை ]

[பேராசிரியர் இருதயராஜ்]

எப்பொழுதும் சமாதான நிலை இருந்தால், மக்கள் உள்நாட்டு விவகாரங்களில் அதிக அக்கரையோடு அரசாங்கத்தில் குறைகள் கண்டுபிடிக்க முனைவார்கள்.

ஒவ்வொரு தேச மக்களும் தங்களுடைய கலாச்சாரத்தால் உலகுக்கு ஒவ்வொரு விதத்தில் வழிகாட்டியாக இருக்கமுடியும். மனித குலத்தின் முன்னேற்றத்தையும் அதன் சரித்திரத்தையும் பார்த்தால் ஒரு உலகப் பண்பு வளர்ந்து வருவதைப் பார்க்கலாம். ஒவ்வொரு காலத்திலும் இந்த உலகப் பண்பு ஒவ்வொரு தேச மக்களின் கலாச்சாரத்தில் காணப்படுகிறது. ஆதிகாலத்தில் அடிமைத்தனமே உலகப் பண்பாக இருந்தது. அந்தக் காலத்தில் உலகத்தில் எங்கு பார்த்தாலும் கொடுங்கோலர்கள் மக்களை அடிமைப்படுத்தி ஆண்டு வந்தனர். அதற்குப் பின் உயர்குடிப் பிறந்தவர்கள்மட்டும் சுதந்தரமாக வாழ்ந்த நிலை தோன்றியது. அது கிரீஸ், ரோம் போன்ற தேசங்களில் காணப்பட்டது. கடைசியாக ஜெர்மனியில்தான் எல்லோரும் சமமான, எல்லோரும் சுதந்தரமாக வாழும் அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. தன்னுடைய சொந்த நாடாகிய ஜெர்மனியில்தான் உலக முன்னேற்றத்தின் முதிர்ச்சி அடங்கியிருக்கிறதென்று நினைத்தார், ஹெகல்.

ஹெகல் மட்டுமல்ல; கான்ட், பிக்டே இவர்கள்கூட ஜெர்மனியைப்பற்றிப் பெருமையாக நினைத்தார்கள். உலகுக்கு வழிகாட்டியாக இருக்கும்நிலை ஜெர்மனிக்கு வருமென்றும், உலகத்தின் முன்னேற்றத்தில் ஜெர்மனியின் பங்கு பெரியதென்றும் அவர்கள் நினைத்தார்கள்.

ஹெகலின் கொள்கைகள், அவருடைய காலத்திலும் அதற்குப் பின்னும் ஜெர்மனியின் வளர்ச்சிக்கு வெகுவாக உதவின. "நாடுகளுக்குள் சமாதானம் நீடித்திருக்காது. உலக வரலாற்றின் போக்கைப் பார்த்தால், நாடுகள் ஒன்றோடொன்று போரிட்டுக் கொண்டிருப்பதே இயற்கையாகத் தோன்றுகிறது. அதனால், ஒவ்வொரு நாடும் எப்பொழுதும் போர் புரியத் தயாராயிருக்கவேண்டும். போர் புரிய வலிமைவேண்டும். வலிமைதான் ஒரு நாட்டுக்கு இன்றியமையாதது. அதுதான் பெருமை தருவது. போரில் வெற்றி பெறும் அரசே கடவுட் தன்மை உடையது. அவ்வித அரசுக்குப் பணிவது உண்மையான சுதந்தரமாகும். அவ்வித அரசின் செய்கைகள் அனைத்தும் நியாயமானவை" என்று ஹெகல் சொன்னதை அப்படியே நடைமுறையில் பின்பற்றி பிஸ்மார்க் என்பவர் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை அமைத்தார். அதுமட்டுமன்றி, 19-வது, 20வது நூற்றாண்டுகளில் ஏற்பட்ட யுத்தங்களுக்கெல்லாம் ஹெகலின் கொள்கைகள் ஐரோப்பா முழுவதும் பரவியதே காரணமாகவும் கொள்ளலாம்.

ஜெர்மன் அரசியற் கொள்கைகளை பிரிட்டனில் பின்பற்றியவர்களில் கிரீன், பிராட்லி, போசான்கிட் ஆகிய மூவரையும் குறிப்பிடலாம்.

### கிரீன் (1836–1882)

அறத்தின் அடிப்படையில் அமைந்ததே அரசு. அது பகுத்தறிவின் விளைவு. பகுத்தறிவு இருக்குமிடத்தில் சுதந்தரம் இருக்கும். சுதந்தரத்தை ஏற்றுக்கொண்டால் உரிமைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். உரிமைகளை ஒத்துக்கொண்டால் அவைகளைக் காக்க ஒரு அரசு தேவை என்று ஒத்துக்கொள்ள வேண்டும்.

மனிதனின் நோக்கம் தனது இலட்சியத்தை அடைவது. அதற்கு விருப்பம்போல் செயலாற்றச் சுதந்தரம்வேண்டும். அதே நேரத்தில்மற்றவர்களுக்கும் இந்தச் சுதந்தரம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். எல்லோருக்கும் இந்தச்சுதந்தரம் இருக்கிறதென்பதை ஏற்றுக்கொண்டால், அதை நிலைநாட்ட ஒரு ஸ்தாபனம் தேவை. அதுதான் அரசு என்பது. எல்லோருடைய விருப்பத்தின் விளைவுதான் அரசே தவிர பலாத்காரம் அல்ல. ஆனால் அதற்காக அரசானது பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாதென்பதல்ல அதன் பொருள். உரிமைகளைக் காக்க—ஒருவரின் சுதந்தரத்தைக் காப்பாற்ற — மற்றவரின் வரம்பில்லாத சுதந்தரத்தைக் கட்டுப்படுத்தப் பலாத்காரம் தேவைப்பட்டாலும் படலாம். ஆனால் எல்லோரும் தங்களுக்குத் தேவை என்று கருதக்கூடிய ஒரு சுதந்தரச் செயலை அல்லது உரிமையை அரசு தடைசெய்தால்தான் அவர்களெல்லோரும் சேர்ந்து அரசை எதிர்க்கலாம்—மற்றப்படி அரசுக்கு விரோதமாக நடப்பது தவறு என்றார் கிரீன்.

ரூசோ, ஹெகல் இவர்களையொட்டி கிரீனும், ஒவ்வொருவருக்கும் இரண்டுவித விருப்பங்கள் உண்டு. உண்மையான விருப்பம் எப்பொழுதும் சுதந்தரமாக இருக்கும். வெளிப்படையான விருப்பம் தீயதாக இருக்கும். அதை அரசு அடக்கத்தான் செய்யும். அதனால் தீய விருப்பத்துக்கு சுதந்தரமில்லை. ஆனால் இதைக்கொண்டு உண்மையான சுதந்தரம் கட்டுப்பட்டதாக நினைக்கக் கூடாது, என்றார்.

ஹெகலைவிட கான்ட்டுடைய கருத்துக்களே கிரீனுடைய கொள்கைகளுக்குக் காரணமாயிருந்தன. ஹெகலைப்போல் அரசு மக்களுக்கு மேலான ஒரு அமைப்பு என்று கிரீன் நினைக்கவில்லை. மக்களுக்கு அரசனிடத்துக் கடமைகள் இருப்பதைப் போலவே அரசுக்கும் மக்களிடத்துக் கடமைகள் இருக்கின்றன என்பதை கிரீன் ஒத்துக்கொண்டார்.

### பிராட்லி

பிராட்லி என்பவர் ஹெகலையே அதிகம் பின்பற்றினார். மக்களுக்கு நல்லொழுக்கத்தைப் புகட்டி இயற்கையில் வளர்ச்சியடையும் ஒரு அமைப்பே அரசு என்றார். ஒருவன் மனிதனாக வாழ்வதும், நல்லொழுக்கச் சட்டங்களுக்கு உட்பட்டு சுதந்தரமாக நடப்பதும், சமுதாயம் என்ற ஒரு அமைப்பு இருப்பதால்தான். சமுகத்தில் ஒருவன் பிறப்பதனால்தான் அவனுக்கு தேசீய, நாகரீகப் பண்புகள், குடும்பப் பாதுகாப்பு முதலியவை கிடைக்கின்றன. சமுகத்தில்

பிறந்த ஒருவன் வளரும்போது அவன் பேசக் கற்றுக்கொள்ளும் மொழி, அவன் பழகும் சுற்றுச் சார்புகள் இவைகளின் மூலம் சமூக வாழ்க்கை அவனுடைய இரத்தத்தில் ஊறிவிடுகிறது. அதன்பின் அவனுடையஒவ்வொரு செய்கையும், பேச்சும், எண்ணமும் அவனுக்கும் சமூகத்துக்குமுள்ள தொடர்பை வெளிப்படுத்தும் காரணம், சமூகம் நலம் பெற்றால் தான் தானும் நலமடையலாம் என்றும் அவன் நம்புகிறான் என்றார் பிராட்லி.

ஒவ்வொருவனும் சமூகத்தில் தனக்கென்று குறிக்கப்பட்டுள்ள, அதாவது, ஒவ்வொருவனும் தன்னை எந்த அந்தஸ்திலே காண்கிறானோ, அந்த அந்தஸ்துக்கு ஏற்ற கடமைகளைச் சரிவரச் செய்வதிலேயே அவனுடைய நல்லொழுக்கம் அடங்கியிருக்கிறது. ஹெகலைப் போலவே பிராட்லியும் சமூகம் என்பதும் ஒன்றுதான், மக்களுடைய வாழ்க்கையை உருவாக்குவதில் அரசுக்கு அளவில்லாத அதிகாரம் உண்டு. ஒரு அரசில் காணப்படும் மக்கட் சங்கங்கள் எல்லாம் அரசுக்கு அடங்கினவைகளே என்று கருதினார்.

### பொசான்கிட் 1348–1923

ரூசோ, ஹெகல் ஆகியவர்களுடைய கருத்துக்களைப் பின்பற்றினார் பொசான்கிட் என்பவர். அரசு என்பது மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை நீக்குவதற்கு ஏற்பட்டது. அதற்காக பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டியிருந்தாலும் அது தயங்கக்கூடாது. அரசாங்கத்தைக் கட்டுபடுத்தக் கூடிய அறநெறி ஏதுமில்லை. அரசாங்கம் எது செய்தாலும் அதுதான் சரியானது, நியாயமானது. அது குற்றமே செய்ய முடியாது. எல்லாவற்றையும் —மக்கள் வாழ்க்கையை யொட்டியவைகளை யெல்லாம் தன்னுள்ளே அடக்கி வைத்திருப்பதால், ஒரு அரசுக்கு எதிராகவோ அல்லது புறம்பாகவோ அந்த அரசில் வாழும் எவனும் அல்லது எந்த மக்கட் சங்கமும் இயங்க முடியாது என்றார் பொசான்கிட்.

மேலும் ஹெகலைப்போலவே தனி மனிதருக்கு ஏற்பட்டிருக்கும் நல்லொழுக்கச் சட்டங்கள் அரசைப் பாதிக்க முடியாது. மக்களுக்கு அது வழங்கும் உரிமைகளும் அரசைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் பொசான்கிட் கூறினார்.

ஜெர்மன் அரசியற் கருத்துக்களைப் பின்பற்றியே இந்த மூன்று ஆங்கிலேய அறிஞர்களும், அந்தக் கருத்துக்களை தங்களுடைய நாட்டு நிலைக்கேற்ப ,ஆங்கிலேயரின் பண்புக்குத்தக, அவர்களின் சுதந்தர வாழ்வின் விருப்பத்திற்கிணங்க மாற்றி அமைத்துக் கொண்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

### 19வது நூற்றாண்டு

மேனாடுகளில் பதினெட்டாவது நூற்றாண்டில் அரசியல் வானில் உருவாகிய புரட்சிகரமான மாற்றங்கள் பொருளாதாரத் துறையிலும் புதிய கருத்துக்கள் தோன்றக் காரணமாயிருந்தன. அது போன்றே, பதினெட்டாவது நூற்றாண்டில் ஆரம்பித்த தொழிற் புரட்சியினால், பொருளாதார சமூகத்துறைகளில் ஏற்பட்ட விளைவுகள் புதிய அரசியற் கருத்துக்களை 19, 20வது நூற்றாண்டுகளில் தோற்றுவித்தன.

18வது நூற்றாண்டுக்கு முன் ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கங்களெல்லாம் 'மெர்கண்டிலிஸ்ட்' என்ற பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தன. இந்தக் கொள்கையின்படி, ஒவ்வொரு நாடும் தன்னுடைய ராஜ்யத்தில் நிறைய வெள்ளியும் பொன்னும் சேர்த்து வைக்க

# மே முதல் நாள்!

**"சீனி"**

புரட்சி குமுறி வெடித்ததுவும்
புரட்டர் நடுக்கம் தொடங்கியதும்
மிரட்சி மிகுந்த பாட்டாளி
மீசை முறுக்கி எழுந்ததுவும்
வரட்சி பாய்ந்த வாழ்வுடையார்
மரத்துப்போன உணர்வுடையார்
திரட்சி பெற்றுப் பிணைந்ததுவும்
சிவந்த மே முதல் நாளாகும்!

எத்தர் செயலை ஏழையெலாம்
எத்தனை நாட்கள் பொறுத்திடுவார்?
கொத்துங் குளவிக் கூண்டினிலே
குப்பைப் புழுவுங் கொடுக்குறுமாம்!
குத்தும் ஈட்டிக் கூர்மழுங்கக்
கொட்டிய குருதி பார்முழுங்கச்
செத்த உணர்ச்சி சிரித்ததுவும்
சிவந்த மே முதல் நாளாகும்!

மாட்டு மந்தைக் கூட்டமில்லை
மடியும் புழுக்கள் நாங்களில்லை
வேட்டு கிளப்பும் முதலிடமே,
வீம்புப் பேச்சை விட்டொழிப்பாய்!
கோட்டை ஒன்றில் பட்டாளம்
கூடி விட்டது பார்த்திடுவாய்!
தீட்டுமிச் சொற்கள் முழங்கியதும்
சிவந்த மே முதல் நாளாகும்!

கண்ணீர் காய்ந்த விழிக்குழியில்
கனற் பிழம்பு கொதித்ததடா!
புண்ணார் நெஞ்சப் பெருமூச்சுப்
புயலாய்ப் பொங்கி அடித்ததடா!
மண்ணாய் மக்கி அழுகுகிற
வையத் துழைப்போர் முரசடித்துத்
திண்ணிய படையணி வகுத்ததுவும்
சிவந்த மே முதல் நாளாகும்!

ஊமை உணர்ச்சி பெற்றதுவும்
உறங்கும் வேங்கை விழித்ததுவும்
ஆமை கூனல் விடுத்ததுவும்
ஆடும் வீரம் அடைந்ததுவும்
தூய்மை காட்டும் வழிநடந்த
தொழிலாளர்க்கு முன்னாலே
தீமைச் செல்வர் திகைத்ததுவும்
சிவந்த மே முதல் நாளாகும்!

வேண்டும். எந்த நாட்டில் அதிக செல்வம் சேர்ந்திருக்கிறதோ அதுவே பொருளாதாரத்திற் சிறந்த நாடாகும். அதற்காக நாட்டில் தொழில் விவசாயம் முதலியவை செழிக்கும்படி செய்ய வேண்டும். நாட்டுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் சொந்தத்திலேயே தயாரித்துக் கொள்ள வேண்டும். அப்படியின்றி எந்த முக்கியத் தேவைக்கும் பிறநாட்டை எதிர்பார்த்து வாழ்ந்தால், அதனால் போர்க்காலங்களில் போக்குவரத்துக் குறைந்தால் அல்லது எதிரிகள் நாட்டை வளைத்துக்கொண்டால், அதிக சங்கடத்திற்குள்ளாக நேரிடும். அதுமட்டுமல்ல, பிற நாட்டிலிருந்து சாமான்கள் வாங்கினால் அதற்கு மாருக பொனும் வெள்ளியும் கொடுக்கவேண்டும். அதனால் நாட்டின் செல்வம் குறையும். அதற்கு மாருக நாட்டில் உற்பத்தியைப் பெருக்கிப் பிற நாடுகளுக்கு விற்கும் நிலையிலிருந்தால் அதனால் பிற நாடுகளிலிருந்து பொன்னும் வெள்ளியும் இங்கு வந்து சேருர். இதுவே மெர்கன்டிலிஸ்ட் கொள்கை.

இந்தக் கொள்கையைப் பின்பற்றிய நாடுகள் விவசாயமும் தொழிலும் வளரச் சட்டங்கள் இயற்றின. வெளிநாட்டுப் போட்டியின்றி உள்நாட்டு சாமான்களைப் பாதுகாத்தன. வெளிநாட்டுச் சாமான்களின் இறக்குமதியைத் தடுத்தோ, அல்லது அச்சாமான்களுக்குப் பளுவான வரிகளை விதித்து அவைகளின் விலையை உயர்த்தியோ, பொன் வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருள்களை நாட்டுக்கு வெளியே அனுப்புவதற்குத் தடைவிதித்தோ சட்டங்கள் செய்தன.

இந்தக் கொள்கையைத்தான் பின்பற்றியது பிரிட்டனும். வியாபாரம் வளரவேண்டும். வாணிபம் பெருகவேண்டும். பொன்னும் மணியும் வந்து குவியவேண்டும் என்ற கருத்துடன் தூரத்திலுள்ள நாடுகளுடனெல்லாம் வியாபாரத் தொடர்பை ஏற்படுத்துவதற்கு மக்களுக்கு வாய்ப்பும், உற்சாகமும், சலுகைகளும் தந்தது, பிரிட்டிஷ் அரசாங்கம். இதன் விளைவாகத் தோன்றியதுதான் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற வியாபார ஸ்தாபனம். இதுதான் பிறகு பிரிட்டனுக்கு தூரக்கிழக்கில் ஒரு சாம்ராஜ்யத்தையே அமைத்துக் கொடுத்தது.

இந்த வியாபாரக் கம்பெனி முதலில் இந்தியாவுடன் வியாபாரம் செய்யவே ஏற்பட்டது. இந்தியாவில் அப்பொழுது கிடைத்த வாசனைத் திரவியங்கள், பட்டு, கம்பளம் விலையுயர்ந்த வேலைப்பாடுடைய துணி மணிகள், முத்து, பவளம், இது போன்ற இன்னும் பல பொருள்களைப் பெற்று அவைகளை பிரிட்டனில் விற்றுவந்தது. ஆனால் நாளடைவில் இம்மாதிரி வியாபாரத்தால் ஆங்கிலேயர் வாங்கின அவ்வளவு இந்தியப் பொருள்களுக்கும் பதிலாக நிறைய பொன்னும் வெள்ளியும் பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதைப் பார்த்த பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த வியாபாரம் இன்னும் நீடித்தால் பிரிட்டன் செல்வமிழந்து வறுமையுற நேரிடும் என்று கருதிக், கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவிலிருந்து இனி இம்மாதிரிப் பொருள்களை இங்கிலாந்தில் இறக்குமதி செய்யக் கூடாதென்று தடை விதித்தது.

(தொடரும்)

# மாநில மாநாடு : : வரவேற்புக் குழு

——[ : : ]——

## மாவட்டச் செயலாளர்கள் உறுதி

தியாகராயர் கல்லூரி மண்டபத்தில் கூடிய தி.மு.க. புதிய பொதுக் குழுக் கூட்டத்தில், திருச்சியில் நடைபெற இருக்கும் இரண்டாவது மாநில மாநாட்டுக்கான வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களும் தத்தமது மாவட்டச் சார்பில் மாநில மாநாட்டுக்கான நிதி சேர்த்து உதவுவதாக உறுதிகள் தந்தனர்.

வரவேற்புக் குழுவினராக பொதுக்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் ரூ. 10 செலுத்தவேண்டும் என்றும், கழக உறுப்பினர்கள் ரூ. 25 செலுத்தி இடம் பெற்றுக்கொள்ளலாமென்றும் முடிவு செய்யப்பட்டது.

பொதுக்குழுக் கூட்டத்திலேயே 23 பேரிடம் தோழர்கள் மு. கருணாநிதியும் கே. எ. மதியழகனும் ரூ. 230 வசூலித்துத் தந்தனர்.

மாநாட்டு திறப்பாளர்
சேலம் ஜி. பி. சோமசுந்திரம்

வ. வே. குழுத்தலைவர்
அம்பில் தர்மலிங்கம்

செயலாளர்
திருச்சி எம். எஸ். மணி
மதுரை எஸ். முத்து

பொருளாளர்
அண்ணாதுரை.

தொண்டர்படைத் தலைவர்
ஐ. எம். ஷரீப்

பந்தல் குழு
எஸ். எ. ராபி
டி. பி. மூர்த்தி
பண்ணை. முத்துகிருஷ்ணன்
எ. நடராசன்

விளம்பரக் குழு
டி. பி. அழக முத்து
ஜி. பராங்குசம்
அரங்கண்ணல்
எஸ். நெடுமாறன்

கலைக் குழு
மு. கருணாநிதி
அண்ணாதுரை
எம். ஜி. ராமச்சந்திரன்
கே. ஆர். ராமசாமி

தீர்மானக் குழு
ஈ. வெ. கி. சம்பத்
என். வி. நடராசன்
கே. எ. மதியழகன்
எ. வி. பி. ஆசைத்தம்பி

## நமது மாவட்டச் செயலாளர்கள்

சென்னை: இளம்பரிதி
செங்கற்பட்டு: கே. டி. எஸ், மணி
வ. ஆற்காடு: முல்லை. சத்தி
தெ. ஆற்காடு: சாம்பசிவம்
சேலம்: ஜி. பி. சோமசுந்தரம்
கோவை: ஈ. வெ. கி. சம்பத்
மதுரை: எஸ். முத்து
இராமநாதபுரம்: சௌந்தரபாண்டியன்
நாஞ்சில்: வி. எம். ஜான்
நெல்லை: கே. வி. கே. சாமி
தஞ்சை: என். எஸ். இளங்கோ.

திராவிடநாடு

காஞ்சி] 1—5—55 [ஞாயிறு

# புதிய பொதுச் செயலாளர்

—::—

வெள்ளுடையான் கோயிலில், வீரரெல்லாம் கூடி, புதிய பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுத்துவிட்டனர். புன்சிரிப்புத் தவழும் முகமும், புதுமை வேகமும் நிறைந்த தோழர் நெடுஞ்செழியன் அவர்கள், கழகத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பில் அமர்த்தப்பட்டுவிட்டார்.

நல்லவர், நாவலர், நற்றெண்டர், என்றெல்லாம் தோழர்களின் பாராட்டுகளைப் பெற்றவர், நெடுஞ்செழியன். அத்தகைய இளவல், திருவும் உருவும் கொண்டு பரிமளிக்கும் தென்னகத்தின் அரசியல் இயக்கத்தின் தலைமை நாற்காலியில் அமர்த்தப்பட்டுவிட்டார். இந்த அரிய பணியினைச் செய்த திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுத் தோழர்களை, வாழ்த்துகிறோம்—பாராட்டுகிறோம்.

சரிதத்தில் இடம்பெறக்கூடிய இந்தப் பொதுக் குழுவை, மாடகூடங்களும், மாளிகை மண்டபங்களும் நிரம்பிய சிங்காரச் சென்னையில் வேறெந்த இடத்திலும் கூட்டாது, வெள்ளுடை வேந்தன், தியாகத் தீபம், தியாகராயரின் பெயரால் விளங்கும் அறிவுக் கோயிலில் நடத்திட முடிவுசெய்த சென்னை மாவட்டத்தாரின் சீரிய செயலையும், நாம் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தென்னகத்து அரசியல் வரலாற்றில், தியாகரின் திருநாமத்தை, விழிப்புணர்ச்சிகொண்ட யாரும் மறந்திட முடியாது. வெள்ளுடை வேந்தன் என்பர்; வெறும் அடைமொழி அல்ல: தூயமணி, அவர். அப்பேறுபட்ட ஒரு ஒப்பற்ற தலைவரின் திருமண்டபத்திலே, ஒரு வீர இளைஞரைத், தன்னுடைய பொதுச்செயலாளராக ஏற்றுக்கொண்டிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

புனிதமான காட்சியாகும் இது. பூரிக்கக்கூடிய சம்பவம்.

ஆண்டைகளுக்கு அடங்கி நடந்திடும் பண்பு, கழனிகளில் மட்டுமல்ல, அரசியலிலும் உண்டு. ஆளம்பு! பண வசதி! பத்திரிகைப்பலம்!—இவைகளால், மக்கள் மன்றத்தைத் தமது களிநடனக் காடாக்கிக் கொள்ளும், பரம்பரை வியாதி இந்த நாட்டிலும் உண்டு. குருதி கொட்டியோர், கொடி தூக்கி எப்போதும் போல 'ஜே' போட்டுக்கொண்டே இருப்பதும், 'கொல்லைப்புறமாக'க் கட்சிக்குள் நுழைந்த கனவான் திடீர்த் தலைவராக உருப்பெறுவதும், பணப் பெட்டியின் அருளால் அவருக்குப் பராக்குக் கூற பலர் கிடைப்பதும், ஏழைகளும் இல்லாதவர்களும் நிரம்பிய இச்சமூகத்தில் தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் ஒரு சோகக்கதை. இதனுல், மான்கள் உலவவேண்டிய மக்கள் மன்றம், புலிகள் உறுமும் காடாகவும் ஆக நேருவதுண்டு! எண்ணத்தில் தூய்மையிலாத சுயநலமிகள், அரசியல் தொண்டர்களை, சொக்காட்டான் காய்களாக எண்ணிடும் வேதனையும் விளைவதுண்டு!! இந்தத் தொடர் கதைக்கு ஒரு முடிவுகட்டி, அரும்பிய காலமுதல், நடைபோட்டுக் கொண்டு வருவது திராவிட முன்னேற்றக் கழகம்.

தொண்டர்தம் குரலாகக் கழகம் விளங்கவேண்டும் என்று நாம் காட்டி வந்த உற்சாகத்தைக் கண்டு, மகிழ்ந்தோரும் உண்டு! மிரண்டோரும் உண்டு!!

தோழர் நெடுஞ்செழியன், பல்கலைக் கழகத்தில் பெற்ற பட்டத்தைக் கொண்டு, உத்யோக வேட்டைக்குச் சென்று, ஏதோ ஒரு நூறு இருநூறு கொண்டுவந்தால் நல்லதாயிருக்குமே—என்று எதிர்பார்த்த குடும்பத்தின் பிள்ளை. அந்த ஆசைக்காகத்தான், பெற்றோரும், அவரை அனுப்பினர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துக்கு. ஆஸ்டல் வசதி, கடிதம் போட்டதும் மணியார்டர் வரவு, இவைகளை, அவர் பெறவில்லை—அவர், அங்கே கல்வி கற்றதும் ஏழ்மையினூடேதான்! இருந்தும், பெற்ற கல்வியை, உற்றோரின் கவலைகளைப் போக்கும் உத்யோகத்தைத் தேடுவதற்கு முயலாமல், பெரியார் அவர்களின் பெரும்படையில் சேர்ந்து பணியாற்றுவதே பெருமைக்குரிய காரியமெனக் கருதி, நாடு, நகர், பட்டி தொட்டி எங்கும் பவனி வந்தார். பெரியார் அவர்கள் சென்ற இடமெல்லாம், அவர் பேசுமுன், மக்கள் இவருடைய குரலைக் கேட்டனர்—ஐயாவின் அருகிலேயே இருந்து தொண்டாற்றும் 'பெருமை'க்கும் உரியவராக விளங்கினுர். இளவயது முதல், அவருக்கும் அவர்தம் தந்தையாருக்கும், அறிவியக்கத்தின் மீது அளவுகடந்த பற்றுதல் உண்டு. அப்படிப்பட்ட ஒரு வாலிபர், எஃகு உள்ளம்கொண்ட ஏறு, எல்லாவற்றையும் விட எளிமையும் அடக்கமும்கொண்ட ஒரு தொண்டர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது பொதுச் செயலாளராகி இருக்கிறுர்.

அவரைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்ததன் மூலம், திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய அரசியல் நெறி எது என்பதைத் தெளிவாகக் காண்பித்துவிட்டது.

வருங்காலம், வாலிபர்களிடம் உள்ளது!! அத்தகைய வாலிபர்களின் கூடாரம், திராவிட முன்னேற்றக் கழகம். அதன் முதல் தொண்டராக தோழர் நெடுஞ்செழியன், முன்னிறுத்தப்பட்டிருக்கிறுர். அவரைச் சார்ந்து ஆயிரக்கணக்கான வாலிபர்கள் இருக்கின்றனர்! நாடு முழுமையும் கோட்டைகள் பல, ஆயிரக்கணக்கில்-குருதி கொட்டினும் கொள்கைக்காகப் பாடுபடத் தயார் என்று துந்திபி முழக்கும் நாட்டின் நாடிகளான கழகத் தொண்டர்கள் பலர்—பல்லாயிரக் கணக்கில், அவர் பக்கம் நிற்கின்றனர். எனவே, ஜனநாயக முறையில் நடைபோட முயன்று வெற்றிக் கொடி பறக்கவிடும் பயிற்சியில் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கும் நமது பாசறை புதிய அரசியல் பாதையையும், வாலிபர்களைப் பொறுப்புள்ளவர்களாக்கும் புனிதப் போக்கையும் கொண்டு நடைபோடுவதை, தோழர் நெடுஞ்செழியனைப் பொதுச்செயலாளராக்கியதன் மூலம் காட்டிக்கொண்டிருக்கிறது. இக்காட்சியைக் காண்பதற்காக, நாம் காத்திருந்த காலம், அதிகம்! அந்தப் பொற்காலம், துவங்கிவிட்டது—பொறுப்பேற்றுக் கொண்டுவிட்டார், தோழர் நெடுஞ்செழியன். அவரது செயலும் சிந்தனையும், கழகத்தை, மென்மேலும் வலிவுள்ளதாக்கி, மாற்ருரையும் உற்ருராக்கிக்கொண்டு, பெருமித நடைபோடப் பயன்பட வேண்டுமென்று எதிர்பார்ப்பதோடு, தோழரின் தொண்டுள்ளம் வாழ்க! வளர்க!! என்று வாழ்த்துகிறோம். அத்தகையவரைத் தேர்ந்தெடுத்த பொதுக் குழு உறுப்பினர்களையும், அவருக்கு உறுதுணையாயிருந்து கடமைகளை முடிக்கக் காத்திருக்கும் கழகக் கிளைகளையும், "பெற்றுவரும் வெற்றி பெரிது! இந்த வெற்றிகளை மென்மேலும் குவிப்போம்!!" எனும் சூளுரைகளை எடுத்துக்கொண்டு, தொடர்ந்து செய்வோம் நமது தூய பணியினை, விரைவில் பெறுவோம் இன்பத்தாயகம் என்று சொல்லி, மனதார வாழ்த்துவதோடு, நமது அன்பு கலந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். வளர்க, திராவிட முன்னேற்றக் கழகம்! வாழ்க தோழர் நெடுஞ்செழியன்.

★




ரோம் நகரில் மார்க்கத் துறையினரின் மந்திராலோசனைகளைக் கண்டும் கேட்டும் பழகிய ரிஷ்லு, பாரிஸ் பட்டினத்துப் படாடோபத்தைக் கண்டு பழகிய ரிஷ்லு, சேறும் சகதியும், நிரம்பிய லூகான் நகரின் தோற்றத்தையும் அங்கு உலவிய மக்களின் எளிய வாழ்க்கையையும் கண்டு, எப்படி மன அமைதி கெடாமலிருக்கமுடியும்! பாரிசின் பகட்டு எங்கே, இந்தப் பட்டிக்காட்டிலே கிடக்கும் சோர்வு எங்கே! வெறுப்பும் சலிப்பும், எவருக்கும் தோன்றும். ரிஷ்லு, அதற்கு இடம் தரவில்லை. அழைப்புக் கிடைக்கு மட்டும் இந்த எளிய நிலை! இந்த எளிய நிலையிலும், உயரிய முறையைக் காட்டியாகவேண்டும் என்று எண்ணினன். அழைப்பு வந்தது! அரசாண்டுவந்த அம்மையிடமிருந்து அல்ல! அம்மையை 'ரசித்து'வந்த இத்தாலியனிடமிருந்துமல்ல! அரசியல் நிலைமை, அழைப்புவிடுத்தது! பிரான்சு, தன் பேரவையை, முப்பெரு மன்றத்தைக் கூட்டிட முனைந்தது. பெரியதோர் மேகம் அரசியல் வானில்! ரிஷ்லு, தன் சமயம் பிறந்தது என மகிழ்ந்தான்.

பிரபுக்கள்—அருளாளர்கள் — மக்கள் சமுதாயம், இப்படி முப்பெரும் பிரிவு கொண்டதாகக் கருதப்பட்டது, பிரான்சு அரசியல் அமைப்பில். பிரபுக்களின் பிரதிநிதிகள், மார்க்க அதிபர்களின் பிரதிநிதிகள், மக்களின் பிரதிநிதிகள், எனும் முப்பெரும் பிரிவும் ஒரு சேரக் கொண்ட பேரவை, பிரான்சு நாட்டு அரசியல் நெருக்கடிகளின் போது, கூட்டப்படும். கரத்திலே வலிவும், கருத்திலே முறுக்கும் இருக்குமட்டும்; பேரவை பற்றிச் சட்டைசெய்வதில்லை, மன்னன்—மமதை ஒன்றே போதும்; அதை ஊட்டச் சில செருக்குமிக்க பிரபுக்கள் போதும், எதிர்ப்பை ஒழிக்க சிறுபடை போதும் என்று இருப்பான்—குழப்பம் நாட்டிலும் மனதிலும் மூண்டுவிட்ட சமயத்தில், என்ன செய்வது என்று திகில் பிறக்கும்போதுதான் மக்களின் குரல் செவியில் சிறிதளவுவிழும்; மக்களோ, "பேரவை கூடட்டும்" என்றுதான் முழக்கமிடுவர்.

எல்லா உரிமைகளையும் வழங்கவும் பாதுகாக்கவும்' நாட்டின் பொது நிலையைப் பாதுகாக்கவும், ஆற்றல் கொண்டது பேரவை, என்ற எண்ணம் பிரான்சு மக்களுக்கு. அவர்கள் எண்ணிய படியே, இந்தப் பேரவை கூடி, எடுத்த முடிவுகளின்படிதான், 'பதினாலாம் லூயி மன்னன் காலத்திலே மாபெரும் புரட்சி வெற்றிகரமாக்கப்பட்டது. அது, மன்னனின் தலையைக் கொய்த பேரவை! இது அலங்காரப் பேரவை!! இந்தப் பேரவையும் கூட்டவேண்டி நேரிட்டதற்குக் காரணம், அரசாண்டுவந்த மேரி அம்மைக்கும், அரச குடும்பத்துடன் நெருங்கிய உறவுகொண்ட பிரபுக்கள் சிலருக்கும் மூண்ட பகை, பெரு நெருப்பாகிப் பிரான்சைப் பொசுக்கிவிடுமோ என்ற கிலி பிறந்ததால் தான்!

C.N.A

பிரான்சு நாட்டுப் பிரபுக்கள் — உலகத்துக்கே ஜனநாயகத்தை வழங்கிய வள்ளல்கள்!

இந்தப் பிரபுக்களின் அட்டகாசமும் வரட்டு ஜம்பமும், குரூரமும் மடைமையும் கொலைத் தொழிலும் சதிச் செயலும், ஏழையரை இம்சித்ததும் எளியோரை அழித்ததும், பருகிய மதுவும் பதம்பார்த்த கன்னியரின் கற்பும், இவர்களின் கோலாகலம், கிளப்பிய வெறுப்புணர்ச்சியுந்தான், பிரான்சிலே மட்டுமல்ல, ஐரோப்பா முழுவதும், உலகிலேயே என்றும் கூறலாம், மக்களை நிமிர்ந்து நின்று ஏன் என்று கேட்டு, உள்ள உயிர் ஒன்றுதான் அது பிரிவதும் ஒரு முறைதான், சாகுமுன் உன்னைச் சாய்த்திடப் போரிட்டே தீருவேன், என்று வீர முழக்கமிட்டுப் புரட்சி நடாத்தி, மக்களாட்சியை ஏற்படுத்த உதவிற்று! இந்தப் பிரபுக்கள், தர்மம், தயை, தாட்சணியம், அறிவு, ஆற்றல், அன்பு, நன்றி, எனும் பண்புகளுடன் நல்வழி நடந்திருந்தால், மக்களாட்சி மலருவது மூன்று நான்கு நூற்றாண்டுகளாவது தாமதப்பட்டிருக்கும். காட்டிலிருக்கும் புலி, ஊருக்குள் நுழைந்து, ஆடுமாடுகளைக் கொன்று, மேலும் கொல்ல ஊர்க் கோடிக் கொல்லையிலே பதுங்கிக் கொள்ளும் போதுதானே ஊரார் திரண்டு சென்று, உயிருக்குத் துணிந்து நின்று, புலியைக் கொன்றுபோடுவர். பிரான்சின் பிரபுக்கள், புலிகளாயினர்—குகைக்குள்ளேயும் இல்லை—எதிர்ப்பட்ட ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சினர்—எனவேதான், மக்களாட்சி மலரமுடிந்தது. ஆட்சி என்பது அனைவருக்கும் பொதுவான உரிமைதானே, நாடு என்பது அனைவருக்கும் பொதுதானே, நாட்டு வளம் பெருகுவதும், எதிரிகளிடமிருந்து நாடு காப்பாற்றப்படுவதும், எல்லா மக்களின் ஒன்றுபட்ட திறமையாலும் உழைப்பாலும் தானே, எனவே மக்கள் அனைவருக்கும்தானே அரசியல் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும், என்ற தத்துவப் பேச்சு மட்டுமல்ல, மக்களாட்சியை மலரச்செய்தது! பிரபுக்களின் அக்ரமம், புரட்சியை மூட்டிற்று, புரட்சித் தீயிலிருந்து, மக்களாட்சி மலர்ந்தது! அந்த முறையின்படி, பிரான்சின்பிரபுக்கள், உலகுக்கு ஜனநாயகத்தை வழங்கியவர்களாவர்.

1,40,000 பிரபுக்கள் இருந்தனர், பிரான்சில்! எல்லோரும் செல்வச் சீமான்களல்ல, பலர் ஆடி அழிந்ததால் கடன்பட்டுச் சொத்தை இழந்துவிட்டு, விருது மட்டும் வைத்துக்கொண்டு வெட்டிகளாகத் திரிந்தனர். இருபது முப்பது குடும்பம், செல்வமும் செல்வாக்கும் நிரம்பப் பெற்று, அரசு செலுத்துபவரும் அச்சம் கொள்ளத்தக்க ஆர்ப்பரிப்புடன் இருந்து வந்தது. அவர்களுக்குத் தனிக் கோட்டைகள், கொடி மரங்கள், படைகள், பாசறைகள்—ஒருவருக்கொருவர் போரிட்டுக்கொள்வர், அரசனால் தடுக்கமுடியாது, அரசனையே எதிர்ப்பர், அரசன் அவர்களை அடியோடு அழிக்கமுடியாது. அவர்களுக்குத் தனி

விசாரணை மன்றங்கள்! தனிச் சட்ட திட்டங்கள்! அரசுக்குள் ஓர் அரசு! பாரிசில் ஒரு பட்டத்தரசன் என்ருல், பிரான்சிலே பகுதிக்குப் பகுதி, பட்டத்தரசர்களைவிடக் கொட்டமடித்துக்கொண்டு பிரபுக்கள் கோலோச்சி வந்தனர். வரி செலுத்தமாட்டார்கள், அரசனுக்கு. தமது 'பிரஜைகளிடம்' வரிவசூலிப்பார்கள் கண்டிப்புடன். மன்னன், சலுகைகள் காட்டுகிறவரையில் சல்லாபம் செய்வர், சலுகை குறைந்தால், சதியோ, சமரோ கிளம்பும்! அரச விருந்துகளிலே முதலிடம்! கேளிக்கைக் கூடங்களுக்கு அழைப்பு! உல்லாசப் பயணத்துக்கு வருவர்! நாட்டுக்குப் பேராபத்து எனில், வரிந்து கட்டிக்கொண்டு எதிரியைத் தாக்குவரோ? இஷ்டமிருந்தால்! எதற்கும் கட்டுப்படமாட்டார்கள்! ஒரு சில கண்வெட்டுக்காரிகளுக்கு மட்டுமே கட்டுப்படுவர்!! உட்பகை நெளியும்! ஒரு மாளிகை பற்றி மற்ரோர் மாளிகையிலே வம்புப் பேச்சுத் தாராளமாக நடைபெறும். அவள், எனக்கா, உனக்கா? என்று அமளிகிளம்பும், சிறை எடுத்தல், சிரம் அறுத்தல், இவை அன்ருட நடவடிக்கைகள். ''என் பரம்பரையை இழிவாகப் பேசினுயா? நாளைக் காலை 8மணிக்கு, வாட்போர் தயார்-திராட்சைத் தோட்டத்தருகே—8 மணி'' என்று அறைகூவல் கிளம்பும், இரு பிரபுக்கள் வாட்போரிடுவர், ஒரு தலை உருளும், மற்ருெரு மண்டை கனம் கொள்ளும்! பிரபுக்களின் பொதுநிலை இது. ஒரு சில பிரபுக்கள், அரசியல் அதிகாரம் தேடுவர்—திறமை இருப்பதால் அல்ல ஆசை பிறப்பதால்! கிடைக்காவிட்டால், கலகம், குழப்பம்!! இப்படிப்பட்ட பிரபுக்களிடையே, மேரி சிக்கிக்கொள்ள நேரிட்டது.

இத்தாலி நாட்டு கான்சினியும் மேரியும் அவரின் ஆதரவாளர்களும் ஒரு புறம்,

காண்டி எனும் பிரபுவும் அவனை ஆதரிக்கும் சீமான்களும் மற்ரோர் புறம்.



கான்சினியின் கைப்பொம்மை
பிரான்சு ராணி
லூயியின் தாய்
**மேரி**

காண்டி சீமானுக்கு, எவ்வளவு சலுகை காட்டினுலும் திருப்தி கிடையாது—கான்சினி தொலையவேண்டும், மேரி அம்மைக்குத் துணைபுரியும் வாய்ப்புத்தனக்கே அளிக்கப்படவேண்டும், என்பது காண்டியின் கட்டளை! மரியாதைக்காக, வேண்டுகோள் என்றனர், காண்டி, கட்டளை தான்பிறப்பித்தான்.

குழப்பம் வலுத்தது—எனவே பேரவை கூட்டப்பட்டது.

பேரவை கூடுவது பெரிய திருவிழாவாயிற்று. எல்லாச் சிக்கல்களும் தொல்லைகளும் தீர்ந்துவிடும் என்பது, பாமர மக்களின் எண்ணம். எனவே அவர்கள் பேரவை கூடுவதை வரவேற்றனர்! மதத்துறையினருக்கும் மகிழ்ச்சி, தமது உரிமைகளை வலியுறுத்தவும் தமது ஆலோசனைகளை அரசினர் கேட்பதுதான் அறமுறை என்று எடுத்துரைக்கவும் வாய்ப்பு, என்ற எண்ணத்தால். பிரபுக்களுக்குப் பூரிப்பு, தமது அந்தஸ்த்தையும் அதிகாரத்தையும் அரசாளும் அம்மை அறிய இது பொன்னுன வாய்ப்பு என்று. மக்கள் மன்றத்தினருக்கும் நம்பிக்கை, தங்கள் நலன் பற்றி நல்லவர்களெல்லாம் கூடிக் கலந்துபேசி, திட்டம் தீட்டுவர் என்று. ரிஷ்லுவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி, நுழைய இடம் கிடைத்தது என்று. பேரவைக்கு மதத்துறைப் பிரதிநிதியாகச் சென்று தன் திறமையைப் பிரான்சு உணரும் வண்ணம் நடந்துகொள்வது என்று தீர்மானித்தான். தான் வசித்துவந்த வட்டாரத்திற்கு, மத அலுவலர்களின் பிரதிநிதியாக, ரிஷ்லு தேர்ந்தெடுக்கப்பட்டான்! தேர்ந்தெடுக்கும்படி, ரிஷ்லு நிலைமையைச் சிரமப்பட்டு உண்டாக்கி, வெற்றி பெற்ருன். அழைப்புக் கிடைத்துவிட்டது! அழைப்பு, தயாரித்துக்கொண்டான்! பாரிஸ் புகலானுன்!

ஊர் மக்கள் இரு மருங்கும் திரண்டு நின்றனர், காட்சியைக் காண. போர் வீரர்கள் அணிவகுத்து நின்றனர்—பாதுகாப்புக்கும் பகட்டுத் துலங்கவும். பேரவை ஊர்வலம் அழகுறக் கிளம்பிற்று. முப்பெரும் பிரிவினரும் கலந்துகொண்டனர்.

அன்பை அடிப்படையாகக்கொண்டல்லவா அரசாள வேண்டும்? அந்த அன்பு சுரக்கவேண்டும், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும், ஆட்சிமுறை வகுப்பவர்களுக்கும். இதற்காக ஒரு விசித்திரமான ஏற்பாடு!

குருடன், காலிழந்தோன், முடமானேன், தொழுநோயான், பஞ்சை பராரி ஆகியவர்கள், முதலில் ஊர்வலம் சென்றனர். கந்தலணிந்த அந்தக் கதியற்றவரின் நிலையைக் கண்டதும் கண்களிலும் நீர் சுரக்கும், கருணையும் மனதில் பிறக்கும் என்று இந்த ஏற்பாடாம்! இது நெடுங்கால வழக்கமுங்கூட!

இந்தத் 'தரித்திரர்' ஊர்வலம் முதலில்-பிறகு, பேரவை கிளம்பிற்று, தேவாலயத்திலே பூஜையை முடித்துக்கொண்டு!

கரங்களில் மெழுகுவர்த்தி விளக்குகளுடன், மக்கள் மன்ற உறுப்பினர்கள்!

இடையில் வாளும், மேலே பட்டுப் பட்டாடையும், கண்களில் செருக்கும் மிகுந்திட, பிரபுக்களின் உறுப்பினர்கள்.

விதவிதமான ஆடைகளும் அங்கிகளும் அணிந்து, மத அலுவலரின் பிரதிநிதிகள்.

மன்னன், தாயும், பரிவாரமும் புடைசூழ!

**1614**-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ம் நாள் காலை! இந்த நாள் முழுவதும், ஊர்வலமே, பெரிய நிகழ்ச்சியாக இருந்தது. ஊர் மக்களின் உள்ளத்தில் பல புதிய நம்பிக்கை—மகிழ்ச்சி.

மறுநாள், 'போர்போன்' மாளிகையில். பேரவை கூடிற்று.

அலங்கார மேடைமீது, சிங்காதனம்—அதன் மீது வெண் பட்டாடை அணிந்து மன்னன் வீற்றிருந்தான். மேரி அம்மையும், தர்பார் பெண்களும், பரிவாரமும் மன்னருக் கருகில். மன்னன் முகத்திலே தெளிவோ, திருப்தியோ, இல்லை! இளைத்துக் களைத்து, ஏதும் புரியாத நிலையில் மன்னன் வீற்றிருந்தான்! என் செய்வான் மன்னன்! வயது பதின்மூன்று!!

ரிஷ்லுவின் கூர்மையான கண்கள், நிலைமையைப் படம் பிடித்து விட்டன,

அறியாச் சிறுவன் அரியாசனத்தில்—அவனைக் காட்டி அரசாளும் அம்மை, ஆழ்ந்த அறிவற்றவள்; ஆனுல் அதிகார மோகமிக்கவள். உல்லாசத்திற்கு அரண்மனை ஏற்ற இடம் என்பதைமட்டுமே உணர்ந்த கான்சினி, அந்த இடம் தங்களுக்கு என்று கிடைக்கும் என்று ஆவலுடன் இருந்த பிரபுக்கள், கருணை பிறக்கும் கஷ்டம் தீரும் என்று நம்பிக் கிடக்கும் மக்கள் மன்றத்தினர்—இது பிரான்சு!—ரிஷ்லுவுக்குப் புரிந்துவிட்டது.

மன்னன், துவக்க உரையாற்றினுன்—ஆர்வமற்று.

பிறகு, இடிமுழக்கம் எழும்பின, பலரிடமிருந்து,

பிரபுக்கள் சீறினர்—பாதிரிகள் பதறினர்—மக்கள்

மன்றத்தினர் மன்ருடினர்—எவரும், இன்னது தேவை, இப்படி இதனை இன்னுர் செய்ய வேண்டும் என்று தெளிவுபட எடுத்துக் கூறினுரில்லை. பிரபுக்களின் பேச்சிலே பதட்டம்! பூஜாரிகள் பேச்சிலே மிரட்டல்! மக்கள் குரல், தெளிவும் உறுதியும் பெறவில்லை.

முப்பெரும் பிரிவினர் ஒருவருக்கொருவர், கலந்து பேசும் நிலையிலோ ஒன்றுபட்டுத் திட்டம் தரும் திறத்திலோ இல்லை. ஒருபுறம் முரசம், மற்ருேர்புறம் சங்கநாதம், இன்னேர் புறம் முழவு! ரிஷ்லுவுக்கு நம்பிக்கை பலப்பட்டது. இதுதானே பிரரன்ஸ், இவர்கள்தானே இதன் நடுநாயகங்கள், ஒரு கை பார்த்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை.

மன்னனைக் கூர்ந்து நோக்கினுன்—கண்களிலே அறிவுஒளியின் குறியே காணேம். எங்கேயோ நினைப்பு! மன்னனுக்கு எந்தத்துறையிலே விருப்பம் அதிகம் என்று உசாவினுன். வேட்டை ஆடுவதில் என்றனர்.

காண்டி பிரபுவுக்குச்சப்பிட்டுவிட்டது. பேரவை கூடியதும், பலரும் கான்சினியைக் கண்டித்துவிட்டு, அதிகாரப் பொறுப்பைக் காண்டிபிரபுவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறுவர், என்று எதிர்பார்த்தான்—யாரும் அது குறித்துப் பேசவில்லை. அவரவர்களுக்கு அவரவர்களின் பிரச்னைதான் பெரிதாகத் தென்பட்டது, பொதுப்பிரச்னை எது என்பதும் புரியவில்லை. நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் ஆற்றலும் காண்டி பிரபுவுக்கு இல்லை. ஒருவரிருவர் மேரிஅம்மையின் ஆட்சிப்போக்கைக் கண்டித்தனர்—பரிகாரம் கூறவில்லை. ரிஷ்லு, மேரி அம்மையைக் கண்டித்தவருக்குச் சுடச்சுடப்பதில் கொடுத்து, மேரி அம்மையின் பார்வையைப் பரிசாகப் பெற்ருன்.

பொருளற்ற பேச்சுகள் ஒன்றை ஒன்று துரத்தின—பேரவை வீண் ஆரவாரமே என்பது புரியத் தொடங்கி விட்டது. நாட்கள் உருண்டோடின. திங்கள் சிலவும் சென்றன. ரிஷ்லு மத அலுவலர்களின் சார்பிலே பேச அழைக்கப்பட்டார். மேரி அம்மையின் தயவே அதற்குக் காரணம். ஜனவரி 24ம் நாள், ரிஷ்லு பேரவையில் ஆழ்ந்த பொருள் நிரம்பிய சொற்பொழிவு நிகழ்த்தி அனைவருடைய கவனத்தையும் தன்பால் திருப்பிக்கொண்டார். ஒரு மணி நேரச் சொற்பொழிவு—ஒரு துளியும் மார்க்கசம்பந்தமானதல்ல—முழுதும் அரசாளும் முறைபற்றியது, ரிஷ்லு அந்தப் பேச்சின் மூலம், மேரி அம்மைக்குத் தன்னையும் தன் ஆற்றலையும், நோக்கத்தையும், திட்டத்தையும் விளக்கிக்காட்டினுர்.

ஆண்டவன் அளித்த பிரசாதம், அரசாளும் உரிமை.

எனவே அரசாள்வோருக்கு அன்பும் மரியாதையும் அப்பழுக்கின்றித் தரப்பட வேண்டும்.

ஆண்டவன் சார்பிலேயே அரசாள்வோர், பணிபுரிகின்றனர். எனவே, அரசாள்வோரின் அதிகாரம், பலம், தலைசிறந்து விளங்கவேண்டும்—அதைக் குலைப்பதோ, எதிர்ப்பதோ பாபம், கேடு, நாட்டுக்கு நாசம்.

ஆண்டவன் அளித்த உரிமையைக்கொண்டு அரசாள்கின்றனர். எனவே அரசாள்வோர், ஆண்டவனுடைய அருளைப் பெற்று வழங்கும் மத அதிபர்களின் துணையை நாட்டில் பெற்று, ஆட்சி முறையைச் சிறப்படையச் செய்தல் வேண்டும்.

ரிஷ்லுவின் பேச்சிலே காணக்கிடக்கும் முக்கியமான கருத்து இது! ஆள்வோரின் உரிமை, அதிகாரம்—அதை அருளாளர்களின் துணைகொண்டு அரண் செயல் வேண்டும்—என்பதுதான் தத்துவம். நான் இருக்கப் பயமேன்! என்று கேட்பதாக அமைந்தது, அந்தப் பேச்சு, பேரவையினர், முதலில் மகிழ்ந்தனர், பேச்சின் தெளிவும் திறமும் கண்டு; பிறகோ மருண்டனர், உட்பொருள் புரிந்தவர்கள். மேரி அம்மையின் மனதிலே, ரிஷ்லு நமக்குற்ற நண்பன் என்பது பதிந்துவிட்டது—ரிஷ்லுவுக்கு அது புரிந்துவிட்டது. பேரவை பயனற்றுப் போயிற்று என்று பலர் மனம் வாடினர். குறிப்பாகப்பேரவையைக் கூட்ட பெருமுயற்சி எடுத்துக்கொண்ட காண்டி பிரபுவுக்கு, சகிக்கமுடியாத சலிப்பு. பேரவை, பெரியதோர் வெற்றி—ஆண்டு பலவாக நான் உழைத்தது வெற்றி தருகிறது, என் குரல் கேட்டுவிட்டது—மேரி அம்மையாரின் மனதிலே என்பேச்சுப் பதிந்துவிட்டது—இனி அம்மைக்கு அரசியல் ஆபத்து நேரிட்டது என்ற உடன், எனக்குத்தான் அழைப்பு வரும். இனி, என் அரசியல் நுழைவு உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது—என்று ரிஷ்லுவுக்குக் கூறிக்கொள்ள முடிந்தது. யாராலோ எதற்கோ கூட்டப்பட்ட பேரவை, ரிஷ்லுவுக்குத்தான் பெரிதும் பயன்பட்டது. பிரான்சும் புரிந்துவிட்டது, அதை ஆளும் முறையும் ரிஷ்லுவுக்குப் புரிந்துவிட்டது.

தன் சொற்பொழிவை, ஏராளமான பிரதிகள் அச்சிட்டு வழங்கினுன் ரிஷ்லு, பாராட்டினர் பலர், பூரித்தான். பயணம் சொல்லிக்கொண்டு, பாரிசை விட்டுப் புறப்பட்டு, லூகான் வந்து சேர்ந்தான்— தன் தேவாலயத்தைக் கவனிக்க!!

பேரவையால் ஆபத்து உடனடியாக ஏற்படாது, எனினும் பேரவையில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள், தத்தமது ஊர் திரும்பியதும், தீமூட்டிவிடுவர் — எனவே பேரவையைக் கூட்டாமலிருப்பதே நல்லது என்று மேரி தேவிக்கு நண்பர் ஒருவர் கூறினுர்.

அவர் எச்சரித்தது உண்மையாயிற்று. பிரான்சு முழுவதிலும், கலகவாடை வீசலாயிற்று. கூடிப்பேசிக் காரியமேதும் ஆற்ருது கலைந்த பேரவையினர், தத்தமது மனம் போன போக்கில் ஆட்சிமுறைபற்றிக் குறைகூறியும் எதிர்ப்பு மூட்டியும் வரலாயினர்.

காண்டிபிரபு நெரித்த புருவத்துடனேயே காணப்பட்டான். அவனுக்குத் தூபமிட்டுக் கொண்டும், துதிபாடிக் கொண்டும் சீமான்கள் சிலர் இருந்தனர்.

கான்சினியோ, பேரவை கூடியும் தன்னை அசைக்கவும் முடியாமற் போனதை எண்ணிப் பெருமிதமடைந்தான்.

மேரியோ பூசலும் சிக்கலும் தீராததுடன், மேலும் வளருவது கண்டு திகைத்துக் கிடக்க நேரிட்டது.

மன்னனே, பேரவை கலைந்ததும் தொல்லைவிட்டது என்று எண்ணித் தனக்குப் பிரியமான வேட்டையில் ஈடுபடலானுன். நாலு நாள், ஐந்து நாள் தொடர்ந்து வேட்டையாடி வருவதிலே மன்னனுக்கு விருப்பம். அந்த ஒரு பொழுதுபோக்கிலேதான் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. பல வண்ணப் பறவைகளைத் துரத்தித் துரத்திப் பிடிப்பதிலும், வேட்டையாடுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்ட பெரும் பறவைகளைக் கொண்டு வேறு பறவைகளை வளைத்துப் பிடித்தும், அழகான பறவைகளைக் கொண்டு வந்து அரண்மனையிலேவளர்ப்பதும்மன்னனுக்கு மகிழ்ச்சியூட்டும் விளையாட்டு. மன்னனுடைய தனி அறையே, பறவைக் காட்சிச் சாலையாக இருந்ததாம்! அங்கு முற்றத்திலும் தாழ்வாரங்களிலும், மன்னனுடைய பறவைகள், ஒன்ருேடொன்று ஆடியும், கூடிப் பாடியும், வேட்டையாடியும் பொழுது போக்கும், மன்னன் இந்தக் காட்சியில் சொக்கிக் கிடப்பான்.

மாடப்புறு போன்றதோர் மங்கைநல்லாளை மணந்த பிறகும், மன்னன், பறவைகளுடன் விளையாடிப் பொழுது போக்குவதையே பெரிதும் விரும்பினுன். ஆண்டு பதினைந்தே நிரம்பிய ஆன் அழகி, அரசிளங் குமரி—காதலின் பத்தைத் தரவல்ல அந்தக் காரிகை, தனிமையில் வாடுவாள், மஞ்சத்தில் சோர்ந்து சோர்ந்து படுத்துக் கிடப்பாள்; மன்னனே, தன் நண்பனுடன், பறவைகளின் சிறகொலி கிளப்பும் இசையின் நேர்த்திபற்றியும், வேட்டையாடும் திறம்பற்றியும் மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருப்

பான். அந்த நண்பன், பறவைகளின் சம்பந்தமான நுண் கலை நிபுணன் — வேட்டைக் கலையில் புலமை மிக்கவன்! ஊர் அங்ஙனம் கருதிற்றோ இல்லையோ, மன்னன் நம்பினான்; அதற்காக லீனிஸ் எனும் அந்த நண்பனிடம், மன்னன் அளவற்ற மதிப்பு வைத்திருந்தான். மன்னனுக்கு லீனிஸ் உயிர்த் தோழனானான். மன்னன் அவன் சொற்படி ஆடத் தொடங்கியது, மேரிக்கு மன எரிச்சலைத் தந்தது. இந்தப் 'பாதகன்' மகனைத் தனக்கு எதிராகக் கிளப்பிவிடுவானோ என்று அஞ்சினாள். அரண்மனை வட்டாரமோ, மேரியை ஆட்டிப் படைக்க ஒரு கான்சினி—அரசனை ஆட்டிப் படைக்க ஒரு லீனிஸ் — நல்ல நிலைமை, நல்ல அரசு முறை என்று வெறுப்புடன் பேசிக்கொண்டனர்.

கான்சினி, செருக்குமிக்கவன், லீனிஸ் சூதுக்காரன்! ஏதுமறியாதவன்போல நடித்துவந்தான்—அழகிய பறவைகளுடன் பழகத் தெரியுமே தவிர, அரசியல் சூட்சமம் தெரியாது என்று எவரும் எண்ணும்படி நடந்து வந்தான். ஆனால் மெள்ள மெள்ள, மன்னனைத் தன் வலைக்குள் போட்டுக் கொண்டான். கான்சினியிடம் மன்னனுக்கு இருந்துவந்த வெறுப்பை அதிகமாக்கிவிட்டான். ஆளும் பொறுப்பை இனி இத்தாலிய கான்சினியிடமும் மேரியிடமும் விட்டுவைப்பது கூடாது, நாமே ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டும், நமக்கு, லீனிஸ் துணை நிற்பான் என்ற எண்ணம், மெள்ள மெள்ள மன்னன் மனதிலே உருவெடுக்கலாயிற்று.

மன்னனுடைய திருமண ஏற்பாடு மேரியின் வெற்றிகளில் ஒன்று என்று கருதப்படுகிறது.

மேரி, மெடிசி குடும்ப முறைப்படி தன் பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பதிலும், மருகனைத் தேடிக் கொடுப்பதிலும், திறமையைக் காட்டினாள்.

ஒரு மகள், ஸ்பெயின்நாட்டு இளவரசனை மணந்தாள்.

மற்றோர் மகள், இங்கிலாந்துநாட்டு மன்னன் மனைவியானாள்.

மூன்றும் மகளை சவாய் அரச பரம்பரையில் திருமணம் முடித்தாள். ஆஸ்திரிய அரசிளங்குமரி ஆன், லூயிமன்னனுக்கு மனைவியாக வாய்த்தாள். இந்தத் திருமண காரியத்துக்கு, உடன் வரும்படி காண்டி பிரபுவுக்குக் கட்டளை பிறந்தது. பிரபு மறுத்துவிட்டான். அழைத்ததும் உபசாரத்துக்காக அல்ல, மறுத்ததும் அரசியல் நோக்கு அற்று அல்ல! வெளிநாடு சென்று வருவதற்குள், காண்டி, பாரிஸ் புகுந்து கலாம் விளைவித்தால் என்ன செய்வது என்று எண்ணிய மேரி, காண்டி பிரபுவை, தன் பரிவாரத்துடன் அழைத்துச் சென்றால், பயமற்றிருக்கலாம் என்ற எண்ணத்தால், அழைப்பு அனுப்பினாள்—பிரபுவும் இந்தச் சூட்சமம் அறிந்தே உடன்வர மறுத்தான். இதனால் இரு தரப்பினருக்கும் சிறு சமர் மூண்டது—வெற்றி தோல்வியின்றி, சமர் சாய்ந்தது.

இந் நிலையில் பாரிஸ் இருந்துவந்தது—ரிஷ்லுவின் எதிர்பார்த்த நேரம் வரவில்லை.

காண்டி பிரபுவுக்குப் பல சலுகைகள் காட்டி, மேரி, சமரசம் உண்டாக்கினாள்—பிரபுவும், அரச காரியத்தை உடனிருந்து கவனிக்க அரண்மனை சென்றான்.

மேரி அம்மையின் தயவு பெற ஒருபுறம் பலமான முயற்சி, கான்சினியின் ஆதரவு தேடி வேறோர்புறம் முயற்சி, இரண்டும் போதாதோவென்று, புதிதாகச் செல்வாக்குப் பெற்றுவரும் காண்டி பிரபுவிடம் ஆதரவு நாடி, ரிஷ்லு கடிதம் தீட்டினான். எவரிடமும உள்ளன்போ, மதிப்போ, எவர் கொள்கையிலும் திட்டத்திலும் பற்றோ நம்பிக்கையோ அல்ல; யாரைப் பிடித்தால் தனக்குச் சரியான இடம் கிடைக்கும், யாரிடம் திறவுகோல் இருக்கிறது, யாருடைய புன்சிரிப்பு, அரசியல் வாய்ப்பளிக்கக்கூடியதாக இருக்கிறது என்ற இதுவே, ரிஷ்லுவின் உள்நோக்கம். எனவேதான், மேரி, கான்சினி, காண்டி எனும் எவர் நிலை எப்போது உயர்ந்து காணப்பட்டாலும், அவர்களிடம் குழைந்து கும்பிட்டுக் குறுநகைகோரி நிற்க ரிஷ்லு முனைந்தான். சொந்தக் கௌரவம், முன்பின் நடவடிக்கைகளைக் கணக்கிடும் பண்பு, என்பதுபற்றி ரிஷ்லுவுக்குக் கவலை கிடையாது. எதைச் செய்தாலும், கோரிய இடத்தைப் பிடிக்கவேண்டும்—கணைவீசிப் பிடிக்கலாம்; வலை வீசியும் பிடிக்கலாம்; முறை எதுவாகவேனும் இருக்கலாம்; பலன் கிட்டவேண்டும் என்பதுதான் ரிஷ்லுவின் எண்ணம்.

இந்தச் சந்தர்ப்பத்தில், மேரி, ரிஷ்லுவை, ராணியினுடைய; தர்மாதிகாரியாக நியமித்தார்.

(தொடரும்)

---

# ★ மே விழா ★

திராவிட நாட்டின் ஏழை எளிய பாட்டாளித் தோழர்களின் அமைப்பாக இருந்து பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் ஆங்காங்கு 1-5-55-ஆம் நாளிலிருந்து 10-5-55-ஆம் நாள்வரையில் ஏதேனும் ஏற்ற ஒரு நாளில் உரிய சிறப்பான முறையில் கொண்டாடும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகத் தோழர்கள் துண்டு அறிக்கைகள் வழங்குதல், ஊர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் நடத்துதல்போன்ற முறைகளில் விழாவைக் கொண்டாடுவார்களாக! பல்வேறுதுறைத் தொழிலாளர்களை முன்னேற்றக் கழகக் கொடியின்கீழ் ஒன்று திரட்டுவார்களாக!

மேநாள் நோக்கம் திராவிடத்தின் திக்கெட்டும் பரவுமாக!

'அறிவகம்'
சென்னை

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச் செயலாளர், தி. மு. க.

---


## குன்றத்தூரில்

**2—5—55** திங்கள் இரவு

எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, சி. ஆர். இராசகுமாரி எம். என். கிருஷ்ணன்

நடிக்கும்

**"மகாராணி"**

★

**3—5—55** செவ்வாய் இரவு

கலைவாணர் என். எஸ். கே. டி. ஏ. மதுரம்

நடிக்கும்

**"தளபதி"**

படிப்பக கட்டிட நிதிக்காக

கட்டணம் ரூ 2, 1, 0—8—0

வருக! வருக!!

# "காஷ்மீர் இளவரசி"

"ஹாங்காங்கிலுள்ள பிரிட்டிஷ் அரசுத் தூதுவர் காரியாலயத்துக்கு,முன்பே நாங்கள் எச்சரிக்கை செய்தோம். இது, சாதாரண விபத்தல்ல. வேண்டுமென்றே செய்யப்பட்ட சதி"

—சீன

*

"அப்படி ஒரு எச்சரிக்கை எங்களுக்கு வந்தது உண்மைதான். உடனே நாங்கள் விமான நிலையத்தில், தக்க பாதுகாப்புகளைச் செய்தோம். காஷ்மீர் இளவரசிக்கு அருகில் எவரையுமே நெருங்கவிடவில்லை. எனினும், எப்படியோ இந்த விபத்து ஏற்பட்டுவிட்டது"

—பிரிட்டிஷ் தூதுவர்

*

"வீண் பழி! வேண்டுமென்றே எங்கள்மீது பழி சூட்டப்படுகிறது. காஷமீர் இளவரசிக்கு ஏற்பட்ட விபத்துக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. எங்களையும், சியாங்கே ஷேக்கையும் சேர்த்து குற்றம் சாட்டுவது, அடாத பேச்சு"

—அமெரிக்கா.

* * *

'காஷ்மீர் இளவரசி' பிரச்னைக்குரிய பொருளாகிவிட்டது! அந்தப் பெயர்கொண்ட விமானத்தில்தான் சீனப்பிரதமர் சூ–என்–லாய், பாண்டுங் மநாட்டிற்கு கிளம்புவதாக இருந்தாராம். கடைசி நிமிஷத்தில், அவருடைய திட்டம் மாற்றப்பட்டுவிட்டது. இல்லையென்றால் அவரும் பலியாகியிருப்பார் என்று' எங்கும் செய்திகள் பரப்பப்படுகின்றன—சீனவிலிருந்து, விமானம் ஹாங்காங்கிலிருந்து கிளம்பு முன், ஹாங்காங்கிலுள்ள பிரிட்டிஷ் பொறுப்பாளருக்கு, இப்படியொரு முன் எச்சரிக்கையையும் தந்ததாம் சீன — "சியாங்கே ஷேக்கும் அவரது அமெரிக்க ஆதரவாளர்களும், பாண்டுங்குக்கு சீனப் பிரதிநிதிகளை ஏற்றிக்கொண்டுச் செல்லும் அந்த விமானத்தைத் தொலைக்கத் திட்டமிட்டிருக்கின்றனர்"—என்பதுதான், அந்த எச்சரிக்கை. அதுபோலவே, விமானமும் சிங்கப்பூருக்கு அருகில் வரும்போது, வெடித்து விபத்துக்குள்ளாகியிருக்கிறது! விமான அதிகாரிகள் மூவர்மட்டுமே தப்பினரே யொழிய, அதில் வந்த சீனப் பத்திரிக்கையாளரும், பாண்டுங் சென்றுகொண்டிருந்த சீனத் தூதுக்குழுவின் அதிகாரிகள் சிலரும் மாண்டுபோய் விட்டனர்.

இதனல், 'காஷ்மீர் இளவரசி' பெரிய பிரச்னையாகி யிருக்கிறது! உலகத்திலுள்ள முக்கிய ஏடுகள் யாவும், இந்த விபத்து குறித்து, தீட்டுகின்றன. அமெரிக்காவைச் சார்ந்தோர், அடாத பழியெனவும்; அதனைச் சாராதோர், 'சிந்திக்க வேண்டிய விபத்து,' எனவும் கருத்துக்களை வெளியிடுகின்றனர். விமான விபத்தில் தப்பிய விமானிகளிடமிருந்து மக்களுக்கு முழு விபரங்களும் கிடைக்கவில்லையென்றாலும். ஒரு முக்கிய தகவல் மட்டும் தரப்பட்டிருக்கிறது. அதாவது, விமானம், தளத்திலிருந்து கிளம்பிய பொழுது, நல்ல நிலைமையில் இருந்தது என்பதுதான்! அத்தகவலைக் கொண்டு கவனித்தால், விமானம் இயற்கையான விபத்துக்கு ஆளாகவில்லை யென்றே எண்ணத்தோன்றும்.

சாதாரணமாக, அடிக்கடி விமான விபத்துக்கள் ஏற்படுவதைக் குறித்தே, பலவிதமான கதைகள் கிளம்பிக்கொண்டிருக்கின்ற நேரம் இது. அமெரிக்கர் தமது அணுசக்தியினை இப்படிப்பட்ட காரியங்களிலும் பிரயோகித்துப் பரீட்சித்துப் பார்க்கின்றனர். 'பறக்கும் தட்டு' என்று கூறப்படுவதுகூட அப்படிப்பட்ட ஒரு பரீட்சைதான்—என்றெல்லாம் கதைகள் புறப்படுகின்றன. இவைகளை, அப்படியே நம்பமுடியாது. ஆயினும், நிகழ்ச்சிகள், அப்படியொரு நம்பிக்கையை ஏற்படச் செய்தாலும் ஆச்சரியமில்லை,

பாண்டுங் மாநாட்டால், அமெரிக்காவுக்கு அதிருப்தி இருக்கிறது—என்று வெளியுலகம் வெளிப்படையாகக் கருதுகிற காரணத்தால், விபத்துக்கும் அவர்கள்தான் காரணமோ,என்கிற சந்தேகமும் அதையொட்டிய கதைகளும் சீக்கிரம் பரவுதல், அதிசயமல்ல.

அப்படியொரு எண்ணத்துடன்' 'காஷ்மீர் இளவரசி,' நாசமாக்கப்பட்டிருக்குமென்றல், அதற்குக் காரணமானவர்களை, உலகம் நிச்சயம் மன்னிக்காது.

எனினும், சரியான ஆதாரங்களை அறியாமல், வெறும் யூகங்களால் முடிவுகளைச் செய்துவிடுவதும், சரியல்ல.

இங்கிலையில், அந்த வீபத்து குறித்து, இந்திய சர்க்காரால் விசாரணை நடத்தப்படுமெனத் தெரிகிறது. உயிர் தப்பிய மூன்று அதிகாரிகள் இருப்பதால், போதிய விபரங்களை அறிவதும், சாத்யமாகலாம். காலம் கடத்தாமல், 'காஷ்மீர் இளவரசிக்கு' நேர்ந்த கதியைப் பற்றி, விசாரணை செய்து வெளியுலகுக்கு விளக்கவேண்டியது, டில்லி பீடத்தின், அவசரமும் அவசியமும் நிறைந்த பணியாகும்.

★

## வேண்டுகோள்

அன்பரீர்,

24—4—55ல், தி. மு. கழகப் பொதுக்குழு என்னைப் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுத்திருக்கிறபடியாலும், 'நம் நாடு' ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறபடியாலும், இனி 'பொதுச்செயலாளர், தி. மு. க.' என்ற முகவரிக்கும், 'ஆசிரியர், நம் நாடு,' என்ற முகவரிக்கும் அனுப்பும் கடிதங்கள், ரிஜிஸ்டர், மணியார்டர் ஆகியவைகளில், 'இரா. நெடுஞ்செழியன்,' என்று பெயரிட்டு அனுப்பக் கோருகிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்.

## ஒரே ஒரு இடம்

அமைச்சர் சுப்ரமணியம் மேதினத்துக்கு விடுமுறையளிக்கமுடியாது என்றுர்.

ஆனல், அவரது ஆட்சியின் கீழுள்ள மலபார் மாவட்டம், மேதின நாளை விடுமுறை நாளாகக் கொண்டாடுவதாகத் தீர்மானம் செய்திருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே இம்முடிவுசெய்த மாவட்டம் மலபார ஒன்றுதான்,

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

முன் பணத்துக்குமேல் அதிக பாக்கி வைத்துள்ள தோழர்கள் 3-5-55க்குள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பிவிடவும். அப்படி அனுப்பி வைக்காத தோழர்களுக்கு 8—5—55 முதல் பத்திரிகை கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது என்பதை அறியவும்.

—மேனேஜர்
திராவிடநாடு.

4-பக்கத் தொடர்ச்சி

ராணுவ ஒப்பந்தங்கள் உலக அமைதியைக் குலைக்கக் கூடியன என்று பேசப்பட்டது, ஆனால் பாதுகாப்புக்காக அத்தகைய ராணுவ ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று தீர்மானம் கூறுகிறது!

நல்ல இலாபம் என்கிறார் வியாபாரி!

புதுப் புதுச் சாமான்கள் வாங்கினேன் என்கிறார் அம்மையார்!

வாணவேடிக்கை பலே ஜோர்! என்கிறான் சிறுவன்.

வத்சலாவைப் பார்த்தேன் என்கிறான் வாலிபன்.

பஜனை பரமானந்தமாக இருந்தது என்கிறார் பக்தர்.

காம்போதியை வெளுத்துவாங்கி விட்டேன் என்கிறார் நாயனக்காரர்.

பத்துநாள் 'சுகபோஜனம்' என்கிறான் பண்டாரம்.

நாலு பல் உதிர்ந்துவிட்டது என்கிறான் பிடிபட்ட கள்ளன்.

ஆறு சவரன் இருக்கும் என்கிறான் பிடிபடாத கள்ளன்!

ஐயயோ! இனி ஒருமுறை போவேனா? என்கிறாள் இளமங்கை.

காணக் கண்காட்சியே, என்று பாடி ரசிக்கிறான் உல்லாச புருஷன்!

திருவிழா சென்று திரும்பியவர்களில், ஒவ்வொருவர் ஒவ்வோர் வகை 'அனுபவம் பெறுகிறார்கள் —வெற்றிப் பட்டியல் அளிக்கிறார்கள்! அதுபோல், பாண்டுங் போய் வந்த ஒவ்வொரு நாட்டுத் தலைவரும், 'தத்தமது' வெற்றி பற்றிப் பேசிக்கொள்ள முடிகிறது! எல்லோருக்கும் ஏதாவதொரு வகையில் மகிழ்ச்சி கிடைக்கும் நோக்குடனேயே தீர்மானங்கள் உள்ளன!

நேரு பண்டிதர் நீண்ட நாட்களாகப் பராமரித்து வருகிறார் 'பஞ்சசீலம்' எனும் திட்டத்தை.

அது வெற்றி பெற்றுவிட்டது என்று கூறிக்கொள்ளவும் இடமிருக்கிறது.

## இசையரசு

இசையரசு எம். எம். தண்டபாணி (தேசிகர்) அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைத்துறைப் பகுதிப் பேராசிரியராகப் பதவியேற்றுள்ளார் என்பது அறிய மகிழ்கிறோம்.

பண்டிதரின் பஞ்சசீலக்கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை, 'பத்து அம்சத் திட்டம்' தயாரித்து விட்டோம் என்று பாகிஸ்தான் உட்பட பல நாடுகள் பேசவும் இடமிருக்கிறது.

**ஐந்து பத்தாகிவிட்டது!**

காலனி முறையைக் கடுமையாகக் கண்டித்தோம் என்றும் பேசிக்கொள்ள முடிகிறது—சோவியத் ரஷியாவுக்குச் சரியான சூடு கொடுத்தோம், என்று பேசவும் இடமிருக்கிறது.

தெளிவாகவும் திட்டமாகவும் தீர்மானத்தின் வாசகம் இருந்தால், மாநாடு சச்சரவில் முடியும் என்று அஞ்சியே, இப்படி 'எல்லோருக்கும் பொதுவான' முறையிலே தீர்மானங்கள் தயாரிக்கப்பட்டன.

திட்டவட்டமாகத் தீர்மானங்கள் தயாரிக்கக் கூடிய சூழ்நிலை இல்லை என்பதுமட்டுமல்ல, அத்தகைய தீர்மானம் தயாரிக்கும் தகுதி இருப்பதாக கூறிக்கொள்ள எந்த நாட்டுத் தலைவருக்கும் துணிவு இல்லை—காரணம் ஒவ்வொருவர் கரத்திலும் அழுக்கு இருக்கத்தான் செய்கிறது—ஒருவருக்கொருவர் அச்சமும் அசூயையும் அறவே அற்றவர்கள் என்றும் கூறிட முடியாது.

பர்மாவில் சீனர்கள் தொல்லை தருகிறார்கள்!

பாகிஸ்தானும் ஆப்கனிஸ்தானும் 'கொடி கொளுத்தும்' வேலையில் ஈடுபட்டுள்ளன!

ஈஜிப்டுக்கும் சூடானுக்கும் பகை புகைகிறது.

அராபிய நாடுகளுக்கும் யூத நாட்டுக்கும் பூசல் இருக்கிறது.

சமரசம்! சமாதானம்! சுதந்திரம்! கூடிவாழ்தல்! எனும் புனிதமான கொள்கைகளைப் பேசிக்கொண்டிருக்கும் அதேபோது நேரு பண்டிதரின் பட்டாளம், நாக நாடு கேட்பவர்களைச் சுட்டுத் தள்ளுகிறது!

உலகுக்கே நீதி நியாயம் நேர்மை என்பவைகளைப் போதிக்கும் கொத்தலாவலையின் ஆட்சியிலே தமிழர் தத்தளிக்கிறார்கள்!

உடன் பணியாற்றி, மக்களின் உள்ளத்தில் கோயில் கொண்டவர் என்று போற்றப்பட்டு அரசோச்சி வந்த நகீபை முக்காடிட்டு மூலையில் உட்கார வைத்துவிட்டுத்தான் நாசிர் நகைமுகம் காட்டி அரசியல் நாகரீகம் பேசுகிறார்.

தங்களுக்குச் சாதகமாக இருக்கும் வரையில் 'ஜனநாயகம்', தமது ஆதிக்கத்துக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற குறி தெரிந்தாலும் போதும், உடனே 'சர்வாதிகாரம்'—என்ற போக்கிலே உள்ளவர்களே பாண்டுங்கில் கூடிய தலைவர்கள், எனவேதான் புண்ணைப்போக்க மருந்து தேடமுடியவில்லை — குமட்டல் எடுக்காமலிருக்க, புண்ணுக்கு புனுகு பூசிக்கொண்டனர்.

பாண்டுங் — கவிழ்ந்த படகு என்கிறார்கள்.

படகு நிமிர்த்தப்படவில்லை!

★

## ஆக்லாந்து

சர். ரிச்சர்டு ஆக்லாந்து!—விரைவில் புதிய பொதுத் தேர்தலை நடத்த இருக்கும் பிரிட்டனில், இந்தப் பெயர், ஒரு பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. அட்லி கட்சியின் சார்பில், பார்லிமெண்டில் அங்கம் வகித்த இவர் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, மீண்டும் தேர்தலுக்கு நிற்கிறார்! மீண்டும் என்றால் வரப்போகிற பொதுத் தேர்தலில், அல்ல. இப்போதே, நிற்கிறார்! அவருடைய தொகுதியில், இடையில், ஒரு உபதேர்தல்! இப்போது, இவர் சுயேச்சையாக நிற்கிறார். ஐட்ரஜன் குண்டுகளை உற்பத்தி செய்யும் திட்டத்துக்கு அட்லி கட்சியும் சம்மதித்தது பிடிக்காமல், ராஜினாமா செய்த இவர், தன்னுடைய கருத்துக்கு மக்கள் மன்றம் காட்டும் ஆதரவை வெளிப்படுத்துவதற்காகத் தேர்தலில் நிற்கிறார். ஜனநாயகப் பண்பு கொண்டவர்கள், ஆக்லாந்தின் திறமையை வாழ்த்துகிறார்கள்! அவரது செயல் பற்றி, எங்கும் பேசப்படுகிறது!

அவருக்கு நமது ஆச்சாரியாரும் தியாகராய நகரிலிருந்து 'தேர்தல் பிரச்சாரம்' செய்கிறாராம். ஆக்லாந்து தொகுதியிலுள்ள மக்களுக்கு, லண்டனிலிருக்கும் மான்செஸ்டர் கார்டியன் 'ஏடு மூலம் செய்தி அனுப்பியிருக்கிறாராம். செய்தியில் உணர்ச்சியும்இலக்கியச் சுவையும் ததும்புகிறதாம்! 'ஏடு வெளியிடுகிறது!

ஆச்சாரியாரின் 'ஆதரவுகள்' எப்போதுமே, வெற்றியளித்ததில்லை. அன்பர் ஆக்லாந்துக்கு என்ன கதி நேருகிறதோ?

★

# 'ஆமாம் சாமிகள்!'

"காக்கை கருப்பு நிறம்!"

"ஆமாம். கருப்பு நிறம்."

"தவறு! காக்கை, சிகப்பு நிறம்!!"

"ஆமாமாம். சிகப்பு நிறம்."

*

எதற்கெடுத்தாலும், 'ஆமாம்' போடுவோரைப் பற்றி, சொல்லுவதுண்டல்லவா, 'தலையாட்டும் தம்பிரான்கள்,' என்று! "இப்படிப்பட்டவர்களாயிருக்கமாட்டோம். இவ்விதம் தலையாட்டும் தம்பிரான்களாயிருந்து நாங்கள் பட்டபாடு போதும். எதிர்காலத்தில், ஒரு போதும் இப்படியிருக்கமாட்டோம்," என்று பாண்டுங் மாநாட்டில் பேசிய பண்டித நேரு அவர்கள் வெளியிட்டிருக்கிறார்! தலையாட்டும் தம்பிரான்களுக்கு அவர், தந்த பெயர், "ஆமாம் சாமிகள்" என்பதாகும்.

*

"டேய்! கந்தா! எப்படடா, என் மீசை?"

"பேஷாயிருக்கு எஜமான்! மன்மதனே, நேரா வந்தது போலே யிருக்கு"

"சகிக்கலேன்னு எல்லோரும் சொல்றாங்களேடா....... எனக்கும் அவுங்க சொல்றதுதான் சரின்னு படுது......"

"எனக்குக்கூட அப்படித்தாங்க படுது, எஜமான்! நீங்க என்ன சொல்லுவீங்கலோன்னு, சொன்னேன். உங்க முகத்துக்கு இந்த மீசை மட்டும் இல்லேன்னா, அசல் மன்மதன் தான் போங்க......"

*

ஆமாம் சாமிகள், பலரகம்! அரசு மண்டபத்திலிருந்து, அங்காடிக் கடை வரையில் ஒவ்வொரு இடத்திலும் உண்டு, இவர்கள். பாரை ஆட்டும் பத்திரிகாலயத்திலிருந்து, பாராளும் பீடத்துடன் தொடர்பு கொண்டிருக்கும் கட்சித் தலைவர்கள் வரை, எங்கும் உண்டு, "ஆமாம் சாமிகள்." அப்படிப்பட்டவர்களா யிருக்கமாட்டோம்! எங்கள் விவகாரங்களை, வெளியிட்டு ஒளிவு மறைவு இன்றி, ஒரு முடிவுக்கு வருவோம் — என்று, பண்டித நேரு அவர்கள், பாண்டுங் மாநாட்டிலே சங்கநாதம் செய்திருக்கிறார். ஆமாம் சாமிகள், ஆபத்தானவர்கள்! அப்படிப்பட்டோரை நம்புபவன் நிச்சயம், வாழமுடியாது; என்றுவது ஒருநாள் இக்கட்டில் மாட்டிக்கொண்டு, அவதிப்படவே நேரும். பண்டிதர், இதனை ஏன் அங்கே வெளியிட்டாரென்றால் பலருக்கு 'ஆசிய நாடுகள், ஐரோப்பா—அமெரிக்கா—ரஷ்ய நாடுகளின் 'கார்பன் காபி'களாக யிருப்பதாக, ஓர் எண்ணம் உலவுகிறதாம். அதனை மறுத்தே, இப்படி வெளியிட்டிருக்கிறார், அவர்! நேருவின் குரலில், உரிமை முரசு கேட்கிறது — தலையாட்டும் தம்பிரான்களாகயிருந்தது போதும், என்கிறார், வீரத்துடன். எடுப்பார் கைப்பிள்ளைபோல, எதற்கும் 'சரி, சரி!' என்று சொல்லிக்கொண்டு, நாட்டை அந்நியரின் வேட்டைக்காடாக்கமாட்டோம்!நாங்கள் விழித்துக் கொண்டோம்!— என்பதுதான், நேருவின் குரல் கூறும் உண்மை. பேச்சில் காரம் மட்டுமல்ல; விவேகமும் தெரிகிறது அதுமட்டுமல்ல, ஒரு விளக்கமும் கிடைக்கிறது. அதாவது, இதுவரை, ஆண்டையைத் திருப்திப்படுத்த நினைக்கும் எடுபிடிபோல, எதற்கும் 'ஆமாம்' போடும் நிலையில், இந்திய உபகண்டமும் இன்னும் சில நாடுகளும் இருந்துவந்தன, என்பதுதான, அது. இனி இரோம் அப்படி, என்கிறார் நேரு! இதுவரையில், அவ்விதம் இருந்திருக்க நேர்ந்ததையும் ஒப்புக்கொண்டிருக்கிறார்! அதைத்தான், காங்கிரஸ் சுயராஜ்யம் பெற்ற நாள் முதல், பிற கட்சியினர் சொல்லி வந்தனர்—அமெரிக்காவுக்கு 'ஆமாம்' போடுபவர்கள்! வெள்ளையருக்கு தலையாட்டும் தம்பிரான்கள்!—என்பதாக. அப்போது மறுத்தோருக்கு, பண்டிதரின் விளக்கம், போதும். 29 நாடுகள் ஒன்றுகூடி விட்டன எனும் துணிச்சலில், துந்துபி முழக்கியிருக்கிறார், பண்டித நேரு.

ஆதிக்க நாட்டுக்கு, அதுகையை எதிர்பார்க்கும் நாடு 'ஆமாம்' போடுவதுமட்டுமல்ல; அரசில், கட்சியில்; சமூக நடவடிக்கையிலேயே இப்படிப்பட்ட 'ஆமாம் சாமிகள்' குறையவேண்டும். அப்போதுதான், ஜனநாயகம் மணம் பரவும்! சர்வாதிகாரத்திற்கும், பணக்காரனுக்கும், ஆதிக்கப்புரியினனுக்கும் தான் 'ஆசாமிகள்' தயவு அவசியம். ஆனால், ஜனநாயக முறைக்கு, குறைகூறி விமர்சிப்பவர்களே வேண்டும்! அப்போதுதான், குறைகள் களையப்பட்டு, நன்மைகள் மலரும். பாண்டுங் மாநாட்டில் கர்ச்சித்தாரே பண்டிதர், அவருக்கு இந்தியத் துணைக்கண்டத்தின் நிலை, நிச்சயம் கவனத்தைவிட்டு மறைந்திருக்காது. ஏனெனில், அவரைச் சுற்றியிருப்போரனைவரும், ஆமாம் சாமிகள்தான்! பார்லிமெண்டு, மாகாண மந்திரிசபை, கட்சிக் கூடம் எங்கும் அவரது வாக்கை, வேத வாக்காக ஏற்றுக் கொள்பவர்களுக்குத்தான் இடம். ஏனையோர் என்றால், பிடிசாபம்!— என்கின்றனர். பண்டிதரின் நிலையே அதுதான்! இதுபற்றி நாம் சொன்னால் பலருக்கு கோபம் வரும். சின்னாட்களுக்குமுன் பண்டிதரின் சகோதரி கிருஷ்ணா ஹத்தீசிங் என்பவரே ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார், "எனது சகோதரருக்கு யாராவது தன்னுடைய போக்கையோ, நடவடிக்கையையோ விமர்சிக்கிறார்களென்றால் அவர்கள் மீது சீற்றம் வரும்," என்பதாக. அவர் எழுதியது மட்டுமல்ல, கண்ணாரக் காண்கிறோம் நாம்! அடிக்கடி சுடுசொற்களை அள்ளி வீசுவதும், எதிர்க்கட்சிகள் என்றால் அவர்களை 'நான்சென்ஸ்' 'காட்டுமிராண்டி' என்று ஏசுவதுமான பண்புகள் எவ்வளவு இருக்கிறதென்பதை. அப்படிப்பட்டவர் தான், அங்கே, 'ஆமாம்சாமி'களாயிருக்கமாட்டோம்—என்று கர்ச்சிக்கிறார்! நல்ல கருத்துத்தான். ஆனால், நடைமுறையில் பார்க்கும்போது, இவர் எந்த அளவுக்குக் கடைபிடிக்கிறார் என்பதே சிந்தனைக்குரிய விஷயமாகிறது. இவரைச் சுற்றியிருப்பது அத்தனையும், 'ஆமாம்சாமி'கள்தான்! அப்படிப்பட்ட 'ஆமாம்சாமி'கள் தான் இவருக்கும் தேவைப்படுகிறார்கள்!! எதிர்த்துப்பேசுவோர் சொந்தக்கட்சி யிலிருந்தாலும் சரி, மட்டம் தட்டப்படுகிறார்கள். ஆயினும், அவர், பாண்டுங்கில். அவ்வண்ணம் பேசுகிறார்! அதற்கு அபரிமித கையொலியும் கிடைத்திருக்கிறது.

★

## திருமணம்

25—4—55 விழுப்புரம் நாப்பாளையத் தெரு, நெ. 43ம் இல்லத்தில் எனக்கும், தோழியர் தேரேசா அம்மைக்கும் திருமணம் நடைபெற்றது.— B. அருள்தாஸ், திராவிடநாடு விற்பனையாளர், விழுப்புரம்.

# மே தின விழாவும்—நமது கடமையும்

மே தின விழா! மேதினி எங்குமுள்ள பாட்டாளிகளால், கொண்டாடப்படும்.

பாட்டாளிகளின் அரசு அமைக்கப் பாடுபடும் திராவிட முன்னேற்றக் கழகமும் அந்நாளை சிறப்பாகக் கொண்டாடும்படி, தோழர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இந்நாட்டில் முதல் முதலாக மே தின விழா நடத்திய பெருமை, நம்முடைய சுயமரியாதை இயக்கத்துக்குத்தான் உண்டு. அதன் தூதுவர்களான நாமும், ஒவ்வோராண்டும், 'மே தினம்' கொண்டாடத் தவறுவதில்லை. எந்த ஆண்டையும்விட இப்போது பாட்டாளிகளின் விழிப்பு நாளாகிய இதனைச் சிறப்பாக நாம் கொண்டாட வேண்டுமெனக் கருதுவதற்குக் காரணம் உண்டு.

முதலாளி வர்க்கம், முன்பெல்லாம், மிரட்டும்; அடிக்கும்—ஆனால், இப்போது, தேன் கலந்த நஞ்சைக் கொடுத்து, உயிரைப் போக்கடிக்கும் சாகச வேலையில் ஈடுபட்டிருக்கிறது. இந்தச் செயல், வெளிநாடுகளைவிட, சமீபத்தில் விடுதலை பெற்ற சுயராஜ்ய பூமிகளில், வேகமாக நடக்க ஆரம்பித்திருக்கிறது.

துப்பாக்கிக் குண்டுகளைவிட, சதியுள்ளம் சக்திவாய்ந்தது என்பர். இந்திய முதலாளி வர்க்கம், இப்போது, மூர்க்கக் குணம் விடுத்து, மோகினிக் குணம்கொண்டிருக்கிறது. அதே பாதையை, ஆளும் கட்சியும் அமைத்துக்கொண்டிருக்கிறது.

அதனால், நெஞ்சம் புகைந்தாலும், உதட்டில் புன்சிரிப்பைக் காண்கிறோம் — காங்கிரஸ் தலைவர்களிடம்.

நல்ல எதிரி என்று தெரிந்தாலும், அவனுடன் கூடிக் கெடுக்கவேண்டும் என்று திட்டமிட்டு வேலை செய்யும் முறைகள் தென்படுகிறது எங்கும்.

தேனும் தோற்கும்—அப்படி வருகின்றன வார்த்தைகள், காங்கிரஸ் தலைமையிலிருந்து. ஆனால், இவை யாவும் வார்த்தை அளவிலேயே ஒழிய—செயல் என்று வரும்போது, கட்சியாவது! காமாட்சியாவது! என்று ஒதுங்கிவிடுவதில்லை. தமது கட்சி, கொள்கை என்று பேசி அவைகளின்படியே நடக்கின்றனர்.

ஆனால், செயலுக்குமேல் வஞ்சகப்போர்வை மறைந்து கிடப்பதால், மக்களில் பலருக்கு மனமயக்கம் ஏற்பட்டிருக்கிறது. மாடல் சோஷியலிசம், மந்திரியார் தொழிலாளர்களின் மத்தியில் போய் பேசுகிறார்—என்கிற செய்திகள் உண்மை. ஆனால், சோஷியலிச மாடல் பேசப்படும் அதே நேரத்தில்தான், கட்சிக்குள் பல பணப் பெட்டிகளைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் மத்தியில் செல்லும் அமைச்சரும், "பொறுத்தார் பூமியாள்வார்; தொழிலாளர்களே! அவசரப்படாதீர்கள். எதிலும் பொறுமைவேண்டும்" என்று போதனை புரிகிறார்.

விளைவு, வளம் பெருகவில்லை, மக்கள் மன்றத்தில்! மாடிவீடுகள், பெருகிய வண்ணமே உள்ளன!! — எனினும், தேசியத் தலைவர்கள், தேன்கலந்த தெம்மாங்கினை மட்டும், தினசரி பாடிக்கொண்டிருக்கத் தவறவில்லை.

'வளைத்து வாட்டும் புகையைவிட, சுட்டெரிக்கும் நெருப்பு நல்லது—என்றோர் பழமொழி உண்டு. இந்திய முதலாளித்துவம் இப்போது சுட்டெரிக்கும் நெருப்பாக இல்லை! வளைத்து வாட்டும் புகையாக உருவெடுத்திருக்கிறது!!

இந்த முக்கியக் கேட்டினையும், இது பாட்டாளிகள் அரசு நிறுவ எவ்வளவு தூரம் இடையூறு செய்யும் என்பதையும், திராவிட மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பாசிசம் — சிலந்தியாகிறது! அதுவும் பாகுமொழி பேசும், சிலந்தி! அதன் சிக்கலிலிருந்து, திராவிடத்தை விடுவிக்க வேண்டிய பெரும் பணி, நம்மைச் சார்ந்திருக்கிறது.

பாசிசத்தின் உற்பத்திஸ்தானம், டில்லி பீடம்!—அதன் தொடர்பை அறுத்துக்கொண்டு, இன்பத் திராவிடத்தை அமைக்க வேண்டும் என்பதே, நமது லட்சியம்.

திராவிடம், பாட்டாளிகளின் திரு இடம்!—அது ஒரு சமதர்மப் பூங்கா ஆகவேண்டுமானால், அதற்குள் புகுந்து விளையாடும் ஆதிக்கமெனும் மந்தி, அகற்றப்பட்டேயாகவேண்டும். இப்போது, மந்தி, மகிழ்ச்சித்தரக்கூடிய விதத்தில் பழக முயலுகிறது! எனினும், சேட்டைகளைக் கண்டு சிரித்துவிட்டுப் போகாமல், உண்மையென நம்பி அதற்கு உறுதுணை செய்ய முயல்வது—ஆளுக்கும் கேடு, சோலைக்கும் அழிவு.

இதனை, இந்த மேதின நாளில், ஒவ்வொருவரும் கவனத்தில்வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்திய அரசு பீடத்தையே காலடியில் கிடத்தியிருக்கும் முதலாளி வர்க்கம், தன்னுடைய மார்க்கெட்டாக' வைத்திருக்கிறது, தென்னாட்டை. அதனால், ஆலைகளும், தொழிற்சாலைகளும் இங்கே இல்லை! வேலையற்றோர்—விழியில் கவலைகொண்டோர்—பசியால் அலைவோர்—பரிதாப பிம்பங்கள், நமது நாட்டில்.

இந்த வேதனை தீர, ஒரே ஒரு மார்க்கம் தான், உண்டு. அதுதான், நமக்கு நாமே ஆளும் பொறுப்பை ஏற்பது என்பது!—இந்த, இதய கீதத்தை, நாடு உணரவேண்டும், இந்நன்னாளில்.

அதனால்தான், எந்த ஆண்டினையும் விட, இப்போது பாட்டாளிகளின் எழுச்சி தினமான மே தினத்தைச் சிறப்பான வகையில் கொண்டாட வேண்டுமென, தி. மு. க. விரும்புகிறது.

எனவே,
காங்கிரஸ் பாசிசப் போக்கை
அதன் இன்றைய தன்மையை
வளரும் வடக்கின் நூதை, ஒவ்வொருவரும் முழக்குங்கள்! ஒவ்வொருவருக்கும் சொல்லுங்கள்!!

ஒழிக, முதலாளிவர்க்கம்!
வருக, பாட்டாளிகள் அரசு!!

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press.